இணைந்து ஜெபிப்போம்! இணைந்து பணியாற்றுவோம்!!

# ஆசிரியரின் அருளுரை



திருக்கல்யாணத் தாயின் பாசமிகு பக்தர்களே! உங்கள் அனைவருக்கும் என் ஆசிகளையும், வாழ்த்துக்களையும் வழங்கி மகிழ்கின்றேன்.

திருக்கல்யாண அன்னையின் திருவிழா நிறைவு பெற்ற பின்பும் 100வது ஆண்டு அதிசய தேர்ப்பவனி இன்னும் நம் கண்களை விட்டு நீங்காமல் இருக்கிறது. நாளுக்கு நாள் பெருகிவரும் பக்தர்களின் கூட்டத்தால் ஆலய வளாகம் எப்பொழுதும் நிரம்பி வழிகின்றது.

இந்த மாதம் லூர்து அன்னையின் திருவிழாவை கொண்டாடுகிறோம். அன்று லூர்து நகரிலே காட்சி தந்து அருள் வழங்கிய நம் தேவ அன்னை இன்று நம் பொற்பை நகரிலே திருக்கல்யாண மாதாவாக வீற்றிருந்து நம்மையெல்லாம் வாழவைத்துக் கொண்டிருப்பதை நாம் அனைவரும் அறிவோம்.

பாலர் சபைத் திருவிழாவையும் இம்மாதம் கொண்டாடும் நாம் சிறுவர்களின் நலனுக்காக, அவர்களுடைய வருங்கால வாழ்வுக்காக செபிப்போம். திருக்கல்யாண அன்னையின் பாசமும், பரிவும் அவர்களுக்கு குறைவின்றி கிடைக்க மன்றாடுவோம்.

ஒவ்வொரு சனிக்கிழமைதோறும் அன்னையின் திருப்பாதங்களை குடும்பத்தோடு வணங்கி வாழ்வில் வளம் பெறுவோம்.

உங்கள் அனைவருக்காகவும், எப்பொழுதும் அன்னையிடம் வேண்டுதல் செய்து உங்கள் குடும்ப நலனுக்காக செபிக்கின்றேன்.

இயேசுவுக்கே புகழ்! இயேசுவுக்கே நன்றி!!

அன்புடன்

**பங்குத் தந்தை**

பொத்தக்காலன்விளை.



# உலகத் திருச்சபை செய்திகள்

## திருத்தந்தையின் திருமடல்

நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள் என்ற மையக் கருத்தில் இந்த ஆண்டு ஜுலை மாதம் நடைபெறவிருக்கும் அகில உலக இளையோர் நாளுக்கான செய்தியை திருத்தந்தை வழங்கியுள்ளார். இச்செய்தியில் புதிய நற்செய்திப் பணிக்கென இளையோர் தங்களை இன்னும் ஆர்வமாய் ஈடுபடுத்திக்கொள்ள வேண்டுமென்ற அழைப்பை அவர் விடுத்துள்ளார். கிறிஸ்துவின் சீடர்களாதல், அனைத்து நாடுகளையும் ஒன்று சேர்த்தல், நம்பிக்கையில் ஊன்றியிருத்தல், ஆகிய எண்ணங்கள் உட்பட இச்செய்தியை எட்டு பகுதிகளாக திருத்தந்தை விடுத்துள்ளார். இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் ஆரம்பமாவதன் 50ம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில் அகில உலகத் திரு அவை நம்பிக்கை ஆண்டையும், புதிய நற்செய்திப் பணி என்ற கருத்தையும் சிறப்பித்து வரும் இவ்வேளையில் பிரேசில் நாட்டில் நடைபெறவிருக்கும் இளையோர் நாள் சிறப்பு வாய்ந்த ஒரு தருணம் என்று திருத்தந்தை தன் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## நீதியின் முக்கிய அங்கம்

தவறு செய்வோரைத் தண்டிப்பது மட்டும் நீதி ஆகாது. மாறாக அவர்கள் மீண்டும் நன்னெறியுடன் வாழ வழிவகைகள் செய்வதும் நீதியின் ஒரு முக்கிய அங்கமாகும் என திருத்தந்தை 16ம் பெனடிக்ட் கூறியுள்ளார். உரோம் நகரில் நடைபெற்ற சிறைஅதிகாரிகளின் உயர்மட்டக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஐரோப்பிய பிரதிநிதிகளை வத்திக்கானில் சந்தித்த திருத்தந்தை. மனித நீதி, இறை நீதியின் அடிப்படையில் உருவாக வேண்டும் என்று அழைப்பு விடுத்தார். காகிதங்களில் எழுதப்படும் நீதி மன்றத் தீர்ப்புகளை மனதில் எழுதி அவற்றைத் தகுந்த வகையில் அர்த்தம் கண்டு, தீர்ப்புக்குள்ளானவர்களை வழிநடத்தும் கடினமான பணி உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்று திருத்தந்தையவர்கள் அதிகாரிகளிடம் கூறினார்.

## சுய நலக் கொள்கைகள் கூடாது :

அனைத்தையும் அனுபவித்து வாழத் துடிக்கும் இன்றைய உலகில் சுயநலக் கொள்கைகள் மனிதரின் மாண்பைக் கீழ்மைப்படுத்துவதாக உள்ளன என்று உரைத்தார் திருத்தந்தை 16ம் பெனடிக்ட். இன்றைய உலகில் சமூக அக்கறை குடும்பங்களின் முக்கியத்துவம், பொதுநலனையும், அமைதியையும் வளர்க்கும் முயற்சிகளில் பங்கேற்றல் போன்றவைகளின் தேவை குறித்தும் வலியுறுத்தினார் திருத்தந்தை.

–நன்றி : வத்திக்கான் வானொலி

# மறை மாவட்ட செய்திகள்





01.01.2013 அன்று பனிமயமாதா ஆலயத்தில் மேதகு ஆயர் தலைமையில் புத்தாண்டு திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

- 02.01.2013 அன்று காலை கொம்புத்துறையில் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் திருப்பலி நடைபெற்றது.
- 04.01.2013 அன்று ஆயர் அவர்களின் தலைமையில் குருக்கள் மாமன்றக் கூட்டம் நடைபெற்றது.
- 05.01.2013 அன்று குறுக்குச்சாலை மறைவட்டம் விளாத்திக்குளத்தில் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் மறைமாவட்ட விழா நடைபெற்றது.
- 06.01.2013 அன்று சாத்தான்குளம் மறைவட்டம் சாத்தான்குளத்தில் வைத்து மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் மறைவட்ட விழா நடைபெற்றது.
- 10.01.2013 அன்று மாலை அடைக்கலாபுரம் நிறுவனங்களின் நிர்வாக கூட்டம் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.
- 12.01.2013 மணப்பாடு மறைவட்டம் அடைக்கலாபுரம் அறநிலையத்தில் வைத்து மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் மறைவட்ட விழா நடைபெற்றது.
- 13.01.2013 அன்று வடக்கன்குளம் மறைவட்ட கள்ளிகுளத்தில் வைத்துமேதகு ஆயர் அவர் கள் தலைமையில் மறைமாவட்ட விழா நடைபெற்றது.
- 15.01.2013 அன்று காலை அழகப்பபுரத்தில் உள்ள திரு இருதய சகோதரிகள் வைரவிழா கொண்டாட்ட திருப்பலியும் அன்று மாலை உவரி புனித அந்தோணியார் ஆலய திருவிழா கொடியேற்றமும் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.
- 18.01.2013 அன்று மாலை மறைமாவட்ட நிதிக்குழு கூட்டம் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.
- 19.01.2013 அன்று தூத்துக்குடி மறைவட்டம் தூத்துக்குடி நற்செய்தி நடுவத்தில் வைத்து மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் மறைமாவட்ட விழா நடைபெற்றது.
- 20.01.2013 அன்று காலை மங்களகிரியில் புதிய அருட்சகோதரிகள் இல்லம் ஆரம்பிக்கப்பட்டு மேதகு ஆயர் தலைமையில் திருப்பலி நடைபெற்றது.
- 21.01.2013 அன்று காலை பொத்தக்காலன்விளை புனித திருக்கல்யாண மாதா திருத்தல எட்டாம் திருவிழா அன்று மேதகு ஆயர் தலைமையில் உறுதிப்பூசுதல் திருப்பலி நடைபெற்றது.
- 29.01.2013 அன்று காலை மறைமாவட்ட கல்விக்குழு கூட்டமும் அன்று மாலை மறைமாவட்ட பணிக்குழுக்களின் செயலர்கள் கூட்டமும் மேதகு ஆயர் தலைமையில் நடைபெற்றது.
- 31.01.2013 அன்று 2005ம் ஆண்டு குருப்பட்டம் பெற்ற குருக்களை மேதகு ஆயர் அவர்கள் சந்தித்து உரையாடினார்கள்

நன்றி- **மறைமாவட்ட செய்திகள்**

# பங்குச் செய்திகள்

- 01.01.2013 அன்று நள்ளிரவு புத்தாண்டு திருப்பலி நடைபெற்றது. மதியம் இரண்டு மணிக்கு புனித தொன்போஸ்கோ இளைஞரணி சார்பாக விளையாட்டுப்போட்டிகள் நடத்தப்பட்டு மாலை நற்கருணை ஆசீருக்குப் பின் ஆலய மண்டபத்தில் வைத்து பங்குத் தந்தை அவர்களால் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. புத்தாண்டு தினத்தை முன்னிட்டு ஊரில் உள்ள மக்களனைவரும் பங்குத் தந்தையை சந்தித்து ஆசிபெற்றார்கள்.
- 02.01.2013 அன்று கிறிஸ்மஸ் விடுமுறைக்கு பின் நம் பங்கில் உள்ள பள்ளிகள்ஆரம்பமாயின. இன்று மாலை முதல் அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் மேல்நிலைப்பள்ளியில் வைத்து டியூசன் வகுப்புகள் ஆரம்பமாயின.
- 05.01.2013 அன்று முதற்சனி வழிபாடுகள் மிகச் சிறப்பாக நடைபெற்றது.
- 06.01.2013 அன்று மாலை நற்கருணை ஆசீருக்குப்பின் பங்குத் தந்தை தலைமையில் ஆலய மண்டபத்தில் வைத்து கடந்த ஓர் ஆண்டாக நமது ஊரில் திருத்தொண்டராக பணியாற்றி குருப்பட்டம் பெற்ற அருட்திரு. பபிஸ்டன் அவர்களுக்கு பாராட்டுவிழா நடைபெற்றது.
- 11.01.2013 அன்று நமது பங்கில் உள்ள மூன்று பள்ளிகளுக்கும் தாளாளர் தந்தை தலைமையில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது.
- 13.01.2013 ஞாயிறு காலை திருப்பலியில் அன்னையின் திருவிழா அறிக்கை வாசிக்கப்பட்டது. திருவிழாவில் புதுநன்மைமற்றும் உறுதிபூசுதல் அருட்சாதனங்களை பெற இருப்பவர்களுக்கு பள்ளியில் வைத்து மறைக்கல்வி வகுப்புகள் நடைபெற்றன.
- 14.01.2013 அன்று முதல் திருப்பலி அருட்திரு. சகாயராஜ் அடிகளார் தலைமையில் நடைபெற்றது. திருவிழாவை பங்கு மேய்ப்பு பணிக்குழு, திருவிழா பணிக்குழுக்கள், பாடகர் குழுவினர், சிறப்பித்தனர். திருவிழா நவநாள் திருப்பலி பங்குத் தந்தை தலைமையில் நடைபெற்றது. அன்று மாலையில் புனித மிக்கேல் அதிதூதர் திருஉருவ பவனிக்குப் பிறகு மதுரை உயர் மறைமாவட்ட பேராயர் பீட்டர் பெர்னாண்டோ அவர்கள் பங்குத் தந்தை அருட்திரு. பபியான் ஜோசப் அவர்கள் முன்னிலையில் மற்றும் அருட்தந்தையர்கள் புடைசூழ அன்னையின் திருவிழா கொடியேற்றினார்கள். மாலை நற்கருணை ஆசீரில் ஒரே சர்வேசுரனை விசுவசிக்கிறேன் என்ற சிந்தனையின் அடிப்படையில் பேராயர் அவர்களால் மறையுரை வழங்கப்பட்டது. நற்கருணை ஆசீருக்குப் பிறகு அனைவருக்கும் பொங்கல் வழங்கப்பட்டது. அன்று இரவு அன்னையின் புகழ்பரப்பும் பணிக்குழுவினரால் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது.
- 15.01.2013 இரண்டாம் திருவிழா காலைத் திருப்பலி அருட்திரு. பீற்றர் ராஜா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருவிழாவை திருக்கல்யாணத்தாய் புகழ் பரப்பும் பணிக்குழு, திருக்கல்யாணத்தாய் நற்பணி மன்றம், மற்றும் தன்னார்வத் தொண்டர்கள் சிறப்பித்தார்கள். திருவிழா நவநாள் திருப்பலி அருட்திரு. ஆண்டனி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அன்று மாலை

நற்கருணை ஆசீரில் திருமணவரம் தரும் திருக்கல்யாணத் தாய் என்ற சிந்தனையின்அடிப்படையில் அருட்திரு. ஆண்டனி அவர்கள் மறையுரையாற்றினார்கள். அருள்திரு. டோமினிக் அவர்கள் தலைமையில் நற்கருணை ஆசீர் நடைபெற்றது.

- 16.01.2013 மூன்றாம் திருவிழா காலைத் திருப்பலி அருட்திரு. சகாயராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருவிழாவை அமல அன்னை சபையார், திருக்குடும்ப சபையார் மற்றும் மரியாயின் சேனையாளர் சிறப்பித்தனர். திருநாள் நவநாள் திருப்பலி அருட்திரு கென்னடி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாலை நற்கருணை ஆசீரில் இயேசு சுதனாய் ஜெனித்தவர் என்ற சிந்தனையின் அடிப்படையில் அருட்திரு. கென்னடி அவர்கள் மறையுரையாற்றினார்கள். அருட்திரு. அமலன் அவர்கள் தலைமையில் நற்கருணை ஆசீர் நடைபெற்றது. இரவு கலைநிகழ்ச்சி நடைபெற்றது.
- 17.01.2013 அன்று நான்காம் திருவிழா காலைத் திருப்பலி அருட்திரு. பீற்றர் ராஜா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருவிழாவை அனைத்து அன்பியங்களும் இணைந்து சிறப்பித்தார்கள். திருவிழா நவநாள் திருப்பலி அருட்திரு. கென்னடி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாலை நற்கருணை ஆசீரில் விசுவாச வீரநங்கை திருக்கல்யாணத் தாய் என்ற சிந்தனையின் அடிப்படையில் அருட்திரு. கென்னடி அவர்கள் மறையுரை வழங்கினார்கள். அருட்திரு. சகாயராஜ் தலைமையில் நற்கருணை ஆசீர் நடைபெற்றது. இரவு அனைத்து அன்பியங்களின் சார்பாக கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.
- 18.01.2013 ஐந்தாம் திருவிழா காலைத் திருப்பலி அருட்திரு. பீற்றர் ராஜா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருவிழாவை புனித மரியன்னை மேனிலைப்பள்ளி மாணவ மாணவிகள், ஆசிரியர்கள், மற்றும் அலுவலர்கள் சிறப்பித்தார்கள். திருவிழா நவநாள் திருப்பலி அருட்திரு கென்னடி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாலை நற்கருணை ஆசீரில் மானிட மீட்பர் என்ற சிந்தனையின் அடிப்படையில் அருட்பணி. கென்னடி அவர்கள் மறையுரை வழங்கினார்கள். அருட்திரு. ஏ.எஸ். ராஜா அவர்கள் தலைமையில் நற்கருணை ஆசீர் நடைபெற்றது. இரவு மேனிலைப்பள்ளி ஆண்டுவிழா கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.
- 19.01.2013 ஆறாம் திருவிழா காலைத் திருப்பலி அருட்திரு. பீற்றர் ராஜா அடிகளார் தலைமையில் நடைபெற்றது. திருவிழாவை புனித மரியன்னை துவக்கப்பள்ளி, புனித வளனார் துவக்கப்பள்ளி மாணவ மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் சிறப்பித்தார்கள். திருநாள் நவநாள் திருப்பலி பங்குத் தந்தை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாலை நற்கருணை ஆசீரில் குழந்தை வரம் தரும் திருக்கல்யாணத்தாய் என்ற சிந்தனையின் அடிப்படையில் அருட்திரு. ஜெகதீஸ் அடிகளார் அவர்கள் மறையுரை வழங்கினார்கள். அருட்திரு. கிராசியஸ் அடிகளார் தலைமையில் நற்கருணை ஆசீர் நடைபெற்றது இரவு துவக்கப்பள்ளிகளின் ஆண்டு விழா கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.
- 20.01.2013 ஏழாம் திருவிழா காலைத் திருப்பலி அருட்திரு. அகிலன் அடிகளார் தலைமையில் நடைபெற்றது. திருவிழாவை தொன்போஸ்கோ இளைஞர்கள், புனித ஜெபஸ்தியார் நாடக குழுவினர், முன்னாள் மாணவர்கள்

சிறப்பித்தார்கள். திருவிழா நவநாள் திருப்பலி அருட்திரு. இளங்கோ அடிகளார் தலைமையில் நடைபெற்றது. அன்று மதியம் நான்கு சந்தி கெபியில் பங்குத் தந்தை தலைமையில் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து அசனவிருந்தும் நடைபெற்றது. அதன்பிறகு புனித செபஸ்தியார் சுரூபம் ஊரில் உள்ள அனைத்து மக்கள் இல்லங்களுக்கும் பவனியாக எடுத்துச் செல்லப்பட்டது. அன்று மாலை நற்கருணை ஆசீரில் மரியிடம் ஜெனித்தவர் என்ற சிந்தனையின் அடிப்படையில் அருட்பணி. இளங்கோ அவர்கள் மறையுரை வழங்கினார்கள். அருட்திரு. ஜார்ஜ் அடிகளார் தலைமையில் நற்கருணை ஆசீர் நடைபெற்றது. இரவு தொன்போஸ்கோ இளைஞர்களால் கலை நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

- 21.01.2013 எட்டாம் திருவிழா உறுதிப்பூசுதல் தினமாக கொண்டாடப்பட்டது. திருவிழாவை உறுதிப்பூசுதல் பெறும் சிறுவர், சிறுமியர், நற்கருணை வீரர் சபையார், வின்சென்ட் தே பவுல் சபையார் மற்றும் ஊரில் உள்ள ஆண்கள் அனைவரும் சிறப்பித்தார்கள். தூத்துக்குடி மறைமாவட்ட ஆயர் மேதகு. இவோன் அம்புரோஸ் அவர்கள் தலைமையில் முன்னாள் மறைமாவட்ட முதன்மைக்குரு பேரருட்திரு. மரியதாஸ், சாத்தான்குளம் மறைவட்ட முதன்மைக்குரு பேரருட்திரு. எட்வர்ட் அடிகளார் அருட்திரு. இளங்கோ அருட்திரு. ஆல்பர்ட், பங்குத் தந்தை மற்றும் குருக்கள் இணைந்து திருப்பலி நடைபெற்றது. திருப்பலியில் 33 மாணவ மாணவியர்கள் உறுதிப்பூசுதல் பெற்றார்கள். மதியம் 12 மணிக்கு அருட்திரு. ஆல்பர்ட் அடிகளார் தலைமையில் மலையாளத்தில் திருப்பலி நடைபெற்றது. அன்று மாலை தூத்துக்குடி மறைமாவட்ட முன்னாள் முதன்மைக்குரு பேரருட்திரு. மரியதாஸ் அவர்கள் தலைமையில் சிறப்பு நற்கருணைப் பவனி நடைபெற்றது. அதன்பின் திடமளிக்கும் திருக்கல்யாணத் தாய் என்ற சிந்தனையின் அடிப்படையில் அருட்திரு. இளங்கோ அவர்கள் மறையுரை வழங்கினார்கள். அதன்பிறகு நற்கருணை ஆசீர் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து பொற்பை இளைஞர்களின் வீரசாகச நிகழ்ச்சிகள் நடத்திக் காட்டப்பட்டன.
- 22.01.2013 அன்று 9ம் திருவிழா ஞானஸ்நான தினமாக கொண்டாடப்பட்டது. இன்றைய வழிபாட்டை பீடப் பூக்கள் மற்றும் வெளியூர் வாழ் பொற்பை மக்கள் சிறப்பித்தார்கள். இன்றைய நவநாள் திருப்பலி அருட்திரு. ஆல்பர்ட் அவர்கள் தலைமையில் பேரருட்திரு. மரியதாஸ், மற்றும் குருக்கள் இணைந்து நடைபெற்றது. அருட்திரு. இளங்கோ அடிகளார் மறையுரை வழங்கினார்கள். காலை 10மணிக்கு 27 குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் வழங்கப்பட்டது. சாத்தான்குளம் மறைவட்ட அளவில் சாத்தான்குளத்தில் வைத்து பாலர் சபை மாநாடு நடைபெற்றது. அதில் நமது பங்கில் உள்ள புனித மரியன்னை துவக்கப்பள்ளி புனித வளனார் துவக்கப்பள்ளி, புனித சவேரியார் துவக்கப்பள்ளி பாலர் சபை மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர். அந்த மாநாட்டில் நம் மாணவர்கள் ஊதாரி மைந்தன் என்ற நாடகத்தை நடித்தார்கள். அன்று நடைபெற்ற வினாடி-வினா போட்டியில் மாணவன் அற்புதராஜ், உபகாரஜெகதீஸ் ஆகியோர் பரிசு பெற்றனர். மதியம் 12 மணிக்கு அருட்திரு. ஆல்பர்ட் அடிகளார் தலைமையில் மலையாளத் தில் திருப்பலி நடைபெற்றது. மாலை சொல்லுங்கண்ணே சொல்லுங்க புகழ் திரு இமான் அவர்கள் நகைச்சுவை நிகழ்ச்சி படப்பிடிப்பு நமது ஆலய வளாகத்தில் நடைபெற்றது. அந்த நிகழ்ச்சி 26, 27 ஆகிய இருநாட்களும் மதியம் 1 மணிக்கு ஆதித்யா டி.வியில் ஒளிபரப்பப்பட்டது. மாலை திருக்கல்யாணத் தாயின் 100வது ஆண்டு அதிசயத் தேர்ப்பவனி வெகு சிறப்பாக நடைபெற்றது. அதன்பின் மாலை ஆராதனையில் விசுவாச இல்லம் திருக்கல்யாணத் தாய் என்ற சிந்தனையின் அடிப்படையில் பாளை. மறைமாவட்ட முதன்மைக்குரு பேரருட்திரு.

ஜோமிக்ஸ் அவர்கள் மறையுரை வழங்கினார்கள். அதன்பின் நற்கருணை ஆசீர் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து வாணவேடிக்கைகள் நடைபெற்றது. இரவு 'சொல்லுங்கண்ணே சொல்லுங்க' புகழ் திரு. இமான் அவர்களின் நகைச்சுவை நிகழ்ச்சி நடைபெற்றது.

- **23.**01.2013 அன்று 10ம் திருவிழா புதுநன்மை தினம் திருவிழா திருப்பலி தூத்துக்குடி மறைமாவட்ட முதன்மை குரு பேரருட்திரு. ஆண்ட்ரு டி ரோஸ் அவர்கள் தலைமையில் பங்குத் தந்தை மற்றும் குருக்கள் இணைந்து நடைபெற்றது. இன்றைய வழிபாட்டை புதுநன்மை பெறும் சிறுவர் சிறுமியர் மற்றும் அன்னையின் அனைத்துலக பக்தர்கள் இணைந்து சிறப்பித்தார்கள். அன்பின் திருக்கல்யாணத் தாய் என்ற சிந்தனையின் அடிப்படையில் திருப்பலியில் மறையுரை வழங்கப்பட்டது. மதியம் 12 மணிக்கு அருட்திரு. ஆல்பர்ட் அடிகளார் தலைமையில் மலையாளத்தில் திருப்பலி நடைபெற்றது. அன்று மாலை 4 மணிக்கு சிறப்புத் திருப்பலி நடைபெற்றது. மாலை 5.30 மணிக்கு திருக்கல்யாண அன்னையின் 100வது ஆண்டு அதிசயத் தேர்ப்பவனி நடைபெற்றது. தேர் நிலைக்கு வந்த பிறகு பங்கு தந்தை தலைமையில் நற்கருணை ஆசீர் நடைபெற்றது. அதன்பிறகு ஆலய மண்டபத்தில் வைத்து பங்குத் தந்தை அவர்களுக்கு பாராட்டுக்கூட்டம் நடைபெற்றது. இரவு அசத்தப்போவது யாரு புகழ் வடிவேல் கணேசன் கலைநிகழ்ச்சி நடைபெற்றது.
- **24.**01.2013 அன்று மாலை தேரில் பங்குத்தந்தை தலைமையில் திருப்பலி நடைபெற்றது. அதைத் தொடர்ந்து சிறப்பு ஊர் அசனம் நடைபெற்றது. அதன்பின் இரவு புனித செபஸ்தியார் முதல் நாள் நாடகம் நடைபெற்றது.
- **25.**01.2013 அன்று மாலை தேரில் பங்குத் தந்தை தலைமையில் திருப்பலி நடைபெற்றது. இரவு புனித செபஸ்தியார் இரண்டாம்நாள் நாடகம் நடைபெற்றது.
- **26.**01.2013 அன்று பங்கில் உள்ள அனைத்துப்பள்ளிகளிலும் குடியரசு தினவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. மேல்நிலைப்பள்ளியில் தாளாளர் தந்தையும், துவக்கப்பள்ளிகளில் திருத்தொண்டர்களும் தேசியக் கொடியை ஏற்றி மரியாதை செலுத்தினார்கள். மாணவர்கள் அணிவகுப்பு மரியாதையையும் கலைநிகழ்ச்சிகளையும் பார்வையிட்டார்கள். மாலை புனித செபஸ்தியார் மூன்றாம் நாள் நாடகம் நடைபெற்றது. நாடகம் முடிவில் அனைத்து மக்களும் புடைசூழ மங்கள கீதம் இசைக்க பங்குத் தந்தை தலைமையில் பவனியாக சென்று கொடியிறக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

## நன்றிகள்

- திருக்கல்யாண மாதா திருவிழா, 100வது ஆண்டு தேர்ப்பவனி விழாவை சிறப்பிக்க வருகை புரிந்த மதுரை உயர் மறைமாவட்ட பேராயர் மேதகு. பீட்டர் பர்னாந்து அவர்களுக்கும், தூத்துக்குடி மறைமாவட்ட ஆயர் மேதகு. இவோன் அம்புரோஸ் அவர்களுக்கும், மறைமாவட்ட முதன்மைக் குருக்களுக்கும், முன்னாள் முதன்மைக் குருக்களுக்கும், மறைவட்ட முதன்மைக்குருக்களுக்கும் பல்வேறு பங்குகளிலிருந்து வருகை புரிந்த அனைத்து குருக்களுக்கும், அருட் சகோதரிகளுக்கும் , அருட்பணியாளர்களுக்கும் நன்றி
- திருவிழாவை முன்னிட்டு தேரோட்ட வீதியை சரிசெய்ய, வாகனங்களை நிறுத்தும் மைதானங்களை மணல் அடித்து சரிசெய்ய ரூபாய் 2 லட்சத்து 50ஆயிரம் உபயம் செய்த திரு. எட்வின் காமராஜ் குடும்பத்தாருக்கு நன்றி.

**- பங்குத்தந்தை**




# நன்றிகள் பலகோடிகள் 05.01.2013 முதல்சனி உணவு நன்கொடையாளர்கள்

| | |
|---|---|
| அந்தோணி செல்வன் ரஜுலா | 1000.00 |
| எலியாஸ் ராஜகனி, கொம்புத்துறை | 1000.00 |
| மரிய அந்தோணி மரியசெல்வி, கொம்புத்துறை | 10000.00 |
| பெயர்சொல்ல விரும்பாத நபர், பொற்பை | 501.00 |
| மாரிமுத்து இசக்கித்தாய், மும்பை | 51.00 |
| மரிய காகு ராஜா, வெள்ளக்கோவில் | 2600.00 |
| சிலுவை அந்தோணி கனி, பொற்பை | 501.00 |
| லூக்காஸ் மளிகை, திருப்பூர் | 1000.00 |
| ராஜேந்திரன், பொற்பை | 100.00 |
| ரோஸ் சேவியர், சென்னை | 2000.00 |
| கார்த்தீசன் சாந்தி, வள்ளியூர் | 500.00 |
| முத்துச்செல்வி, நரையன்குடியிருப்பு | 100.00 |
| அந்தோணி செல்வன் ரஜுலா | 1000.00 |
| அந்தோணி ராஜ், பொற்பை | 500.00 |
| செல்வராஜ், பொற்பை | 500.00 |
| பெயர்சொல்ல விரும்பாத நபர், பொற்பை | 200.00 |
| சாபு ராணி, பூவாறு | 500.00 |
| மேக்சன், மணப்பாடு | 500.00 |
| விசுவாச பாஸ்கர், தளவாய்புரம் | 500.00 |
| ஸ்டாலின், பொழியூர் | 1000.00 |
| பொள்ளாச்சிவாழ் பொற்பை இறைமக்கள் | 45000.00 |
| ஜெனட் ரோஸ், கோடிமுனை | 1700.00 |
| பெயர்சொல்ல விரும்பாத நபர், கன்னியாகுமரி | 500.00 |
| மணவை பக்தர்கள், பதுவா டிராவல்ஸ் | 1050.00 |
| சுரேஷ் பாண்டியன் | 100.00 |
| முருகேசன், நரையன்குடியிருப்பு | 1000.00 |
| ஆஷா ஷைனி, தென்திருப்பேரை | 500.00 |
| ஷகிலா வர்க்கீஸ், பூவாறு | 501.00 |
| கென்னடி, தூத்துக்குடி | 100.00 |
| அந்தோணி கிறிஸ்டி ஹேமா | 100.00 |
| கிளமெண்ட் குடும்பத்தார் | 1000.00 |
| சேவியர், ராஜாக்கமங்கலதுறை | 5000.00 |
| பங்கிராஸ், இணையம் | 200.00 |
| பபியான் சரோஜா, மணப்பாடு | 420.00 |
| கர்மர் வளர்மதி, ஆலந்தலை | 1000.00 |
| குமார் சபீதா, கோடிமுனை | 1000.00 |
| அன்பு ஸ்டாலின், ஆலன், விஜய் – சென்னை | 100.00 |
| டெல்பின் அதிசய கனி – சென்னை | 3400.00 |
| மணல்மாதா ரியல் எஸ்டேட், நாகர்கோவில் | 9750.00 |
| ரென்னீஸ் பியூட்டி வேர்ல்ட், நாகர்கோவில் | 6000.00 |

# முதற்சனி உணவுப்பொருள் நன்கொடையாளர்கள்

| | |
|---|---|
| திரு. எட்வின் காமராஜ் டெய்சிராணி குடும்பத்தினர் | 5000 சாப்பாடு பிளேட்,திரு. |
| அன்னையின் அடிமை, பொற்பை | பீடப் பூக்கள் |
| திரு. ஷோபிதா, உவரி | அரிசி 25 கி |
| மரிய அந்தோணி மரிய செல்வி | அரிசி 25 கி |
| எலியாஸ் ராஜகனி, கொம்புத்துறை | அரிசி 25 கி |
| சிலுவைபிரகாசம், பொள்ளாச்சி | அரிசி 25 கி |
| அருள்சேகர், பொற்பை | தேங்காய் 21 |
| ஈஸ்வரன், கோயம்பேடு | தக்காளி 8பெட்டி |
| நீலகிரி டிரேடர்ஸ், கோயம்பேடு | பல்லாரி 2 மூடை |
| ஜெயச்சந்திரன், கோயம்பேடு | கருணைக்கிழங்கு 60கி<br>கேரட் 40கி, ம.பூசணி 40 கி |
| சுரேஷ், கோயம்பேடு | பீன்ஸ் 50கி |
| துரை, கோயம்பேடு | மாங்காய், 5 கி |
| கோயம்பேடு | உருளை 1மூடை |
| ரவிஸ்டர், பொற்பை. | உருளை 1மூடை,<br>சி.வெங்காயம் 60கி<br>ப.மிளகாய் 68 கி |
| சித்திரைராஜ், உடன்குடி | அரிசி 25கி |
| மெர்லின் சிபு, நாகர்கோவில் | அரிசி 100கி |
| மத்தியாஸ், ஆசாரிபள்ளம் | தேங்காய் 12 |
| ஆம்ஸ்ட்ராங், ராஜாவூர் | அரிசி 25 கி |
| சகாய செல்வராஜ், ராஜாக்கமங்கலதுறை | அரிசி 25 கி |
| ஜாண் மனோஜ், குறும்பனை | அரிசி 25 கி |
| குறிப்பிட்ட நபர், பொற்பை | அரிசி 300கி |
| ராஜேஷ் அமலா, பொற்பை | அரிசி 50 கி |
| லீமா ஞானம், மலேசியா | அரிசி 50 கி |
| சைமன் ஜெகதீஷ். மூகாம்பிகை | அரிசி 50 கி |
| ஜஸ்டின், சென்னை | அரிசி 100 கி |
| குறிப்பிட்ட நபர் | அரிசி 100 கி |
| ஜாண்சன் மேரி, கே.டி.சி நகர் | அரிசி 25 கி |
| ரூபி ஸ்டோர், பொற்பை | அரிசி 50 கி |
| ஜெரோம் குயின்டின், கவரப்பேட்டை | அரிசி 100 கி |
| அனிரூத், ராஜாக்கமங்கலதுறை | அரிசி 25 கி |

## திருத்தலக்கடை வரவு செலவு விபரம்

| | |
|---|---|
| 30.11.12 அன்று இருப்பு | 144062.00 |
| 01.12.12 முதல் 31.12.12 வரை விற்பனை | 132646.00 |
| மொத்தம் | 276708.00 |
| 01.12.12 முதல் 31.12.12 வரை செலவு (பொருட்கள் + சம்பளம்) | 99683.00 |
| 31.12.12 அன்று இருப்பு | 177025.00 |

– திருத்தலக்கடை நிர்வாகிகள்

## முதற்சனி மதிய உணவு செலவு விபரம் : (05.01.2013)

| | |
|---|---|
| தூய யோவான் ஆலய பாத்திர வாடகை | 200.00 |
| தூய மிகாவேல் ஆலய பாத்திர வாடகை | 400.00 |
| ஹென்ரி மளிகை பில் | 58933.00 |
| வின்சென்ட் உணவு விடுதியில் | 1133.00 |
| இம்மானுவேல் வண்டி வாடகை | 1850.00 |
| கணேசன் துப்புரவு பணி | 500.00 |
| சுப்பையா துப்புரவு பணி | 1000.00 |
| சமையல் குழு யோவான் | 12000.00 |
| ஜெயபாண்டி 6 பணியாளர்கள் | 1200.00 |
| ஜஸ்டின் மின்னல் தண்ணீர் 98 மூடை | 5346.00 |
| இருதயராஜ் ரூபி ஸ்டோர் அரிசி 4 மூடை | 13600.00 |
| ஜெயக்குமார் வண்டி வாடகை 4 நடை | 800.00 |
| அந்தோனிராஜ் விறகு 2.5 டன் | 6600.00 |
| சென்னை பஸ் காய்கறி செலவு | 700.00 |
| தேவ அமிர்தராணி செங்கல் | 600.00 |
| மொத்தம் | 104862.00 |

| | |
|---|---|
| **முன்னிருப்பு வங்கியில்** | 73911.00 |
| **நன்கொடை மூலம் வரவு** | 102474.00 |
| **மீதமுள்ள முதற்சனி அசனபொருட்கள் ஏல வரவு** | 15890.00 |
| **ஜோஸ் குடும்பத்தினர் வங்கியில்** | 3000.00 |
| **மொத்தம்** | 195275.00 |
| **செலவுகள்** | 104862.00 |
| **இறுதி இருப்பு (வங்கியில்)** | 90413.00 |

## வாழ்த்துகிறோம்

| எண் | மண நாள் | மணமக்கள் | ஊர் |
|---|---|---|---|
| 1. | 27.12.12 | **ரவிமணி பிரான்சிஸ் சுபிதா** | பொற்பை |
| 2. | 28.12.12 | **இக்னேஷியஸ் ஸ்பெர்ஜன் அந்தோணி சுபா** | பொற்பை |

## இதய அஞ்சலி

| | | |
|---|---|---|
| 1.சவரிராயன் | நவமுதலூர் | 28.12.12 |
| 2.மரிய பாக்கியம் | நவமுதலூர் | 17.01.13 |

# அலைமோதிய திருவிழாக் கூட்டம்

பொத்தக்காலன்விளை புனித திருக்கல்யாண அன்னையின் திருவிழா ஜனவரி மாதம் 14-1-2013 அன்று கொடியேற்றத்துடன் தொடங்கி 10 நாட்கள் சிறப்பு நவநாள் திருப்பலிகள் கொண்டாடி 23-1-2013 அன்று அதிசயதேர்பவனியுடன் இனிதே முடிந்தது. இந்த ஆண்டு 2 ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் என்று இறைபணியாளர்கள் மொத்தம் 100க்கு மேல் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தார்கள்.

தமிழகமெங்கும் இருந்து அலைகடலென திரண்ட பக்தர்கள் கூட்டம் குறிப்பாக 9 ம், 10ம் திருவிழாக்களில் கூடிய கூட்டம் எல்லோரையும் திக்குமுக்காட வைத்தது. வெளியூர் மக்களின் உயிரோட்டமான பங்கேற்பு பொத்தக்காலன்விளை பங்கை அருள்தரும் இமயம் திருக்கல்யாண அன்னை யின் பாதத்தில் அர்ப்பணித்து அதன் புகழ் இமயத்தை எட்டியது. 9ம், 10ம் திருவிழாக்களில் நடந்த 100வது அதிசய தேர்ப் பவனியில் கலந்து கொண்ட உள்ளூர், வெளியூர் பக்தர்களின் கூட்டம் மைதானத்தை மறைத்தது. பக்தர்கள் ஆண், பெண் என்று பாராமல் வடம் பிடித்த விதம், தேர் இழுக்கும் போது திருக்கல்யாணத் தாயே என கோசமிட்ட குரல் இமயம் வரை எட்டியது. மக்கள் பக்தியாலும் அன்னையின் மீது கொண்ட பாசத்தாலும் ஈர்க்கப்பட்டு ஒருமைப் பாட்டிலும், அன்பிலும் அன்னை புகழ் பாடி அக்களித்தனர். மரியே வாழ்க திருக்கல்யாண அன்னையே வாழ்க என்று பக்தர்கள் பரவசத்தால் வாழ்த்துப் பாடி ஆனந்தமாய் கொண்டாடினர். தேருக்குப் பின் ஜெபமாலை மற்றும் பக்தி பாடல்கள் பாடி ஒரே குரலில் அன்னையை மகிமைப் படுத்தினர். அதிசய தேர்ப் பவனி அலங்காரமாய் ஜொலித்திட ஆகாயம் அதிர்ந்திட, மக்கள் கூட்டம் கூட்டமாய், சாரை, சாரையாய் தேர் வீதியில் வலம் வந்தனர். தேர்ப் பவனியை வழிநடத்தி செல்லும்போது உப்பு தூவுதல், மாலை சூடுதல், பூ தூவுதல், மற்றும் நாணயங்கள் தூவுதல் என்று மக்கள் வேண்டுதலை அன்னையிடம் சமர்ப்பித்தனர். நல்ல மிளகுதூவி, பதம் பாடி தங்கள் பக்தியை வெளிப் படுத்தி, வரலாறு மறக்க முடியாத திருக்கல்யாண அன்னையின் புகழை வானுயர உயர்த்தினார்கள். மக்கள் திருக்கல்யாணத் தாய் பாதுகாவலியின் ஆசிரைப் பெற்று ஆனந்தக் கண்ணீர் வடித்து கோலாகலமாய் கொண்டாடி னார்கள்.



திருக்கல்யாண அன்னையே ! இமயமாய் இருந்து அருள் பாவிப்பவளே, உம்மைநாடி வரும் பக்கதர்களை அரவணைத்து பாது காப்பவளே ! வழிநடத்துமம்மா என்றும் எம் வாழ்க்கையை உம் பாதம் அர்ப்பணித்து வேண்டுகிறோம். எல்லா மக்களின் குறைபோக்கி நிறைவைத் தந்து பாதுகாத்தருளும் தாயே. அருட்சகோதரி. **மிக்கேல்**, பொற்பை

# உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம்

**தொடர்பு கொள்ளுங்கள் - 04639-261230 , 261330**

**05-01-2013 முதல் சனி அன்னையிடம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள்**

| | | |
|---|---|---|
| திருமணவரம்கிடைக்க | - | 1321 பேர் |
| குழந்தைபாக்கியம் | - | 1064 பேர் |
| சுகப்பிரசவம் | - | 800 பேர் |
| நற்சுகம்பெற | - | 2046 பேர் |
| ஆன்மீகநலன்களுக்காக | - | 1252 பேர் |
| தேவஅழைத்தல் | - | 908 பேர் |
| வேலைகிடைக்க | - | 1426 பேர் |
| தொழில்முன்னேற்றம் | - | 2065 பேர் |
| குடும்பசமாதானம் | - | 2553 பேர் |
| குடும்பநலன் | - | 2160 பேர் |
| உறவினர்நன்மைக்காக | - | 1757 பேர் |
| தேர்வில்வெற்றிபெற | - | 1573 பேர் |
| அலகைதொல்லைதீர | - | 1280 பேர் |
| மனஅமைதிக்காக | - | 1856 பேர் |
| அறுவைசிகிச்சைவெற்றிபெற | - | 769 பேர் |
| மனமாற்றமடைய | - | 1445 பேர் |
| குடிப்பழக்கத்திலிருந்துவிடுபட | - | 1368 பேர் |
| நல்லஇல்லம்அமைய | - | 1616 பேர் |
| சோதனைகளைவெல்ல | - | 1459 பேர் |
| கடன்தொல்லைதீர | - | 2255 பேர் |
| வழக்கில்வெற்றிபெற | - | 821 பேர் |



**அருள்தரும் இமயமே! திருக்கல்யாணத் தாயே! உம்பிள்ளைகளுக்காக வேண்டிக்கொள்ளும்.** - பங்குத்தந்தை

**உங்கள் ஜெபஉதவிக்கு எங்கள் இணையதள முகவரி**

**kalyanamatha@gmail.com**

## நம்பிக்கை ஆண்டின் நற்சிந்தனைகள்

ஆண்டவர் மீது நம்பிக்கை கொண்டோர் பேறுபெற்றோர்.
நம்பிக்கை என்பது நாம் எதிர்நோக்கி இருப்பவை கிடைக்கும் என்னும் உறுதியாகும்.
இறைவனிடம் நம்பிக்கை வைக்கும்போது மனிதர்களால் நம்மை ஒன்றும் செய்யமுடியாது.
நம்பிக்கையற்ற மனிதனுக்கு அமைதி இருக்காது;
கடவுள் நம்பிக்கை அவனுக்கு பயனற்றதாகும்.
ஒரு போதும் நம்பிக்கை இழக்காதீர்கள். – **A. பாத்திமாமேரி,**
கே.டி.சி நகர், பாளை.

# கன்னியரில் உத்தம கன்னிகையே!



பழைய உடன்படிக்கை முழுவதிலும் தூய மனம் கொண்ட பல பெண்கள், மரியாவுக்குக் கிடைத்த பேற்றினைப் பெறத் தவமிருந்தார்கள் அதனை எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். தொடக்க காலத்தில் ஏவாள், கடவுளிடமிருந்து உலக உயிர்களுக் கெல்லாம் தாயானவள். (தொ. நூ 3:15,20) என்னும் வாக்குறுதியைப் பெற்றாள். அவளது கீழ்ப்படியாமையினால் கடவுளிடம் கொண்டிருந்த அவளது உறவில் ஆழமான விரிசல் ஏற்பட்டது. ஆனால், முதிர்ந்த வயதிலும் சாராள் ஒரு மகனைப் பெற்றெடுத்ததன் வழியாக சாராள் இவ்வாக்குறுதியை நிறைவேற்றினார். (தொ.நூ. 18:10-11,21:1-2) எல்லா எதிர்பார்ப்புகளின் மத்தியிலும் , சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்ட, புறந்தள்ளப்பட்ட, ஏழை, எளிய மாந்தரோடு கடவுள் தனது வாக்குறுதியைப் புதுப்பித்ததன் வழியாக, அவர்களிடம் தனது பிரமாணிக்கத்தை உறுதிப்படுத்தினார்.

சாமுவேலின் தாயாகிய அன்னா, தெபோரா, ரூத், ஜூடித், எஸ்தர் மற்றும் பல பெண்கள் இறை உறவில் தங்களைப் பிணைத்துக்கொண்ட பெரும் மங்கையராவார் (1கொரி,1:1, 1 சாமு.1) ஆனால் இவ்வனைத்து பெண்களிலும், பெண்குலத்தில் பிறந்த யாவரிலும், தனது செபத்தால், விசுவாசத்தால், இறைவன் மீது கொண்டிருந்த நல்லுறவால், பிறர் மீது கொண்டிருந்த அன்புறவால் தனித் தன்மை கொண்டு விளங்கியவர் அன்னை மரியா. நீண்ட கால காத்திருப்புக்குப்பின், அன்னை மரியின் கண்ணிய வாழ்வினால், காலம் கனிந்த கன்னியின் வயிற்றில் குழந்தை பிறந்தது. (எபி.10:5)

புனித ஜெரோம், ஹெல்விடியஸ் என்பவரைக் கண்டித்து, தான் எழுதிய மடலில், மரியா கன்னியான அவரால், சூசையும் கன்னித் தன்மையோடு வாழ்ந்தார். கன்னித் தன்மையோடு வாழ்ந்த இருவராலும் கன்னித் தன்மை கொண்ட மகன் பிறந்தார். இயேசு கிறிஸ்து பரிசுத்த ஆவியினால் கருவானார். ஏனெனில், அவர் புதிய படைப்பைத் தொடங்கிய புதிய ஆதாம் (1கொரி. 15:45-47). மரியாவின் கன்னித் தன்மை அவரது விசுவாச அடையாளம் மற்றும் கடவுளின் திருவுளத்திற்கு அவர் அளித்த பரிசு (1கொரி.7:34-35). இவ்வுலகில் எந்தக் கன்னிப் பெண்ணும் மரியாவின் இத்தகைய உயர்ந்த, உன்னத நிலையை எட்ட முடியாது. கடவுளின் மேலான அருளைப் பெற்ற அன்னை மரியா, என்றும் கன்னியரில் உத்தம கன்னிகையாக உலகில் உலா வருகிறார்

-நன்றி. **தாயே எங்கள் தஞ்சமே**




# திருக்கல்யாணத்தாயின் அற்புதங்கள்... சாட்சிகள்...

1. திருமணம் நடந்ததற்கு அன்னைக்கு கோடான கோடி நன்றி.
   –வின்சி, போத்தனூர்
2. நற்சுகம் கிடைத்ததற்கு நன்றி! – சிலுவை ஜெரால்டு, கரூர்
3. குழந்தை வரம் கிடைத்தமைக்கு நன்றி – செல்வகுமார், கொம்மடிக்கோட்டை
4. திருமணம் நல்லபடியாக நடந்ததற்கு நன்றி – பிரதீஸ் சாந்தி, மணப்பாடு.
5. குடும்ப சமாதானம் கிடைத்தமைக்கு நன்றி. – ராபின் சுசி, பிள்ளைதோப்பு
6. திருமணவரம் கிடைத்தமைக்கு நன்றி. – டோரிஸா வள்ளிவிளை
7. வேண்டிய வரம் கிடைத்ததற்கு நன்றி – செல்வி குரூஸ் மணப்பாடு
8. நோயில் இருந்து விடுதலை கிடைத்தமைக்கு நன்றி –
   சூசையடிமை சுனிதா ரவி, புத்தன்துறை.
9. குடும்பத்திற்கு கிடைத்த அனைத்து நன்மைகளுக்கும் நன்றி.
   –ஜெகதீஸ்பாபு சுகந்தி, சென்னை
10. திருமணவரம் கிடைத்தமைக்கு நன்றி – எஸ். செல்வி திரவியம், ஆலந்தலை.
11. விஷக் காய்ச்சலில் இருந்து விடுதலை கிடைத்ததற்கு நன்றி.
    –கிறிஸ்டியானந்த், பொலியூர்
12. வெளிநாடு செல்ல விசா கிடைத்ததற்கு நன்றி. – இக்னேஷியஸ், குளச்சல்.
13. புதிய வாகனம் தந்ததற்கு நன்றி, – புஷ்பராணி அந்தோணி, முள்ளூர்துறை
14. வேலை கிடைத்ததற்கு நன்றி. – ஹேமா, சாத்தான்குளம்
15. அறுவைசிகிச்சை நல்லமுறையில் நடந்ததற்கு நன்றி. –உபால்ட்
    ராஜ் லதா முள்ளூர்துறை
16. திருமணம் நல்லமுறையில் நடந்ததற்கு நன்றி. –ஜெமிலா எடிசன்,
    நொச்சிகுளம்
17. வீடு கட்டி முடித்ததற்கு நன்றி.– ஹர்மிக் வில்மா, முட்டம்
18. திருமண வரம் கிடைத்தமைக்கு நன்றி – ஹில்லரி மோர்ஜின். மணப்பாடு
19. குழந்தை வரம் கிடைத்தமைக்கு நன்றி – காகுராஜா, பொற்பை
20. திருமண வரம் கிடைத்தமைக்கு நன்றி – ரூபன் தர்ஷிணி. ராஜாக்கமங்கலம்
21. குழந்தை பாக்கியம் கிடைத்ததற்கு நன்றி.– ஹெரினா கோடிவிளை
22. உடல் நலம் கிடைத்தமைக்கு நன்றி – புஷ்பம் குளச்சல்
23. குழந்தை வரம் கிடைத்தமைக்கு நன்றி.– மிக்கேல்பிரமிளா குளச்சல்
24. குடும்ப சமாதானம் கிடைத்தமைக்கு நன்றி – மீனா குளித்துறை
25. குழந்தை பாக்கியம் கிடைத்ததற்கு நன்றி. – விவிதா. கன்னியாகுமரி.

**- பங்குத்தந்தை**

# முதல் சனி வழிபாடு (5.01.2013)



திருக்கல்யாண மாதா திருத்தலத்தில்

ஜனவரி மாத முதல் சனி வழிபாட்டு நிகழ்வுகள் 05.01.2013 அன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது. காலை 9.30மணிக்கு ஜெபமாலையுடன் வழிபாடு ஆரம்பமாகியது. அதன்பிறகு அருட்திரு.**ரோஜர்** அடிகளார், குணமளிக்கும் ஜெபவழிபாட்டு ஆராதனையை நடத்தி னார்கள். அதைத் தொடர்ந்து ஆலயத்தை சுற்றி அன்னையின் சப்பரப்பவனி நடைபெற்றது. நவநாள் ஜெபம், விண்ணப்பங்கள் ஒப்புக்கொடுத்தல்,திருப்பலி கருத்துக்கள் ஒப்புக் கொடுத்தல் நடைபெற்றன. அருட்திரு. **Y.D.ராஜன்** அடிகளார், தலைமையில் பங்குத் தந்தை அருட்திரு. **பபியான் ஜோசப்,** அருட்திரு.**பீட்டர் ராஜா,** அருட்திரு.**டோம்னிக்,** அருட்திரு. **பங்கிராஸ்,** அருட்திரு.**போஸ்கோ**, அருட்திரு.**பபிஸ்டன்**, அருட்திரு.**A.S.ராஜா**, . அருட்திரு.**கிராஸிஸ்**, அருட்திரு.**சகாயராஜ்**, திருத்தொண்டர் **டேவிட் வளன்** இணைந்து நவநாள் திருப்பலியை சிறப்பு செய்தார்கள்.

திருப்பலியில் அருட்திரு.**ரோஜர்** அடிகளார் மறையுரை ஆற்றினார்கள். திருப்பலி நிறைவு பெற்றவுடன் நோயாளிகளை மந்திரிக்கும் சடங்கு நடைபெற்றது. பல்வேறு இடங்களிலிருந்து 100 வாகனங்களுக்கு மேலாகவும் மற்றும் பேருந்துகள் வழியாகவும் சுமார் **10,000** க்கு மேற்பட்ட அன்னையின் பக்தர்கள் கலந்து கொண்டு அன்னையின் ஆசீரைப் பெற்றார்கள். வருகை தந்திருந்த அனைத்து மக்களுக்கும் காலையில் பொங்கல் அதன்பின் மதியம் வரை குளிர்பானம், மோர் அதனைத் தொடர்ந்து திருத்தலத்தின் சார்பாக மதிய உணவு வழங்கப்பட்டது.

அதன் பின் மாலை 4.00 மணிக்கு இறைஇரக்கத்தின் ஜெப வழிபாடுகள் நடைபெற்றன. அதை அருட்திரு. **பபிஸ்டன்** அடிகளார் திருத்தொண்டர் **டேவிட் வளன்** இணைந்து வழி நடத்தினார்கள். அதன்பின்பு அருட்திரு. பபிஸ்டன் தலைமையில் பக்தர்களுக்கு சிறப்புத் திருப்பலி நடைபெற்றது.

**- பங்குத்தந்தை**

# டிசம்பர் 2012 – வரவு செலவு விபரம்

| | | |
|---|---|---|
| **வரவுகள் :** முன்னிருப்பு | | |
| நிரந்தர வைப்பு நிதி ரூ.200000.00 | | |
| வங்கியில் ரூ. 2248.00 | | |
| கையில் ரூ.782.00 | 203030.00 | |
| திருப்பலி 526X70 (முதற்சனி 513 அலுவலகம் 13) | 36820.00 | |
| ஞாயிறு காணிக்கை பொற்பை - 20500.00<br>கிளை பங்குகள் - 2310.00 | 22810.00 | |
| வங்கி வட்டி வரவு | 630.00 | |
| திருமணம் | 950.00 | |
| அடக்கம் | 1250.00 | |
| ஞானஸ்நானம் | 500.00 | |
| ஆலய உண்டியல்கள் மூலம் | 171070.00 | |
| பள்ளிகள் மூலம் | 5444.00 | |
| பயணிகள் தங்கும் அறை வாடகை | 200.00 | |
| ஆலய வீடு வாடகை | 1000.00 | |
| அசன மண்டப வாடகை | 5000.00 | |
| பழைய வரிகள் மூலம் | 3000.00 | |
| நன்கொடைகள் மூலம் வரவு | 117000.00 | |
| உபதேசியார் மூலம் வரவு | 18824.00 | |
| முதல்சனி கடைகள் வரவு | 3445.00 | |
| பழைய இரும்பு விற்றது | 2085.00 | |
| **மொத்தம்** | **593058.00** | |
| **செலவுகள் :** | | |
| முதல் சனி அருட்தந்தையர்கள் படி | | 11800.00 |
| மின் கட்டணம் | | 22403.00 |
| விசுவாச ஆண்டு பரிசுகள் | | 660.00 |
| கிறிஸ்து பிறப்பு பரிசுகள் | | 595.00 |
| காம்பவுண்ட் சுவர் லைட் மாட்ட கூலி | | 15200.00 |
| மின் மோட்டார் சரி செய்ய | | 1130.00 |
| ஜேசுதாஸ் கூலி வகையில் | | 4780.00 |
| பாத்ரூம், மண்டபம், பங்களா சுத்தம் செய்ய | | 1500.00 |
| கடிகாரம் | | 750.00 |
| எல்.சி.டி. டிவி மற்றும் கேமரா | | 164000.00 |
| டிவி ஸ்டாண்ட்கள் & டிவி வாடகை | | 915.00 |
| குடிலுக்கு புல் வெட்ட கூலி & வாடகை | | 2600.00 |
| மேக் டிவி விளம்பரம் | | 4000.00 |
| மொழிமாற்றம் & பயண செலவு | | 3200.00 |
| வாகனம் பராமாரிப்பு செலவு | | 4610.00 |
| குடில் போட்டி பரிசுகள் | | 2585.00 |
| குருப்பட்ட பயண கூடுதல் செலவு | | 1300.00 |
| எரிவாயு | | 947.00 |
| எலெக்ட்ரிக் சாமான்கள் | | 20840.00 |

| | |
|---|---|
| வழக்கறிஞர் கட்டணம் | 2500.00 |
| பாடகர் குழுவினர் உடை மற்றும் செலவுகள் | 6995.00 |
| புத்தாண்டு பீடபூக்கள் வாங்கியது | 1200.00 |
| பள்ளியில் மணல் சரிசெய்ய | 2180.00 |
| பீரோ வாங்கிய செலவு | 4750.00 |
| கேமரா வயர்பதிக்க கூலி | 700.00 |
| பங்களா பாத்திரங்கள் வாங்கியது | 2250.00 |
| தண்ணீர் | 720.00 |
| மளிகை சாமான்கள் | 1757.00 |
| பால், மட்டன், சிக்கன் | 1410.00 |
| டீசல் ஜெனரேட்டர் & வாகனம் | 13251.00 |
| பேட்டரி சர்வீஸ் செய்ய | 1020.00 |
| செக்போஸ்ட் | 350.00 |
| இனிப்புகள் மற்றும் கேக் | 579.00 |
| டிரக்கர் வாடகைகள் | 1700.00 |
| மருந்து வகைகளுக்கு | 1379.00 |
| தொலைபேசி & செல்போன் கட்டணம் | 1488.00 |
| டோபி | 360.00 |
| உதவித் தொகைகள் | 3750.00 |
| பதலி தந்தையர்கள் படி | 1100.00 |
| தபால் செலவு & சில்லறை சாமான்கள் | 1136.00 |
| பழங்கள் | 859.00 |
| எலக்ட்ரிக் சாமான்கள் | 1594.00 |
| உபதேசியார் ஊதியம் | 4000.00 |
| சமையல் அம்மா ஊதியம் | 3000.00 |
| இரவுப் பணியாளர் ஊதியம் | 2000.00 |
| துப்பரவு பணியாளர்கள் ஊதியம் | 6000.00 |
| தொடக்கப் பள்ளி ஆசிரியை ஊதியம் | 2000.00 |
| அருட்சகோதரர் படி | 2000.00 |
| பங்குத் தந்தை படி | 6000.00 |
| பங்குத் தந்தை திருப்பலி | 1500.00 |
| புனித வரி<br>திருப்பலி 521 × 5 = 2630<br>திருமணம் 2 × 8 = 16<br>அடக்கம் 2× 7 = 14<br>ஞானஸ்நானம் 1 × 5 = 5<br>திருப்பலி 496 50 = 24800 | 27465.00 |
| மொத்த செலவு | **391808.00** |

| | |
|---|---|
| மொத்த வரவு | ரூ.593058.00 |
| மொத்த செலவு | ரூ. 391808.00 |
| இறுதியிருப்பு | ரூ. 201250.00 |

| | |
|---|---|
| நிரந்தர வைப்பு நிதியில் | ரூ. 200000.00 |
| வங்கியில் | ரூ. 642.00 |
| கையில் | ரூ. 608.00 |
| மொத்தம் | ரூ. 201250.00 |


# வாசகர் உள்ளம்...



- உலகத் திருச்சபை செய்திகள் அகில உலக திருச்சபையைப் பற்றி அறிந்து கொள்ள பயனுள்ளதாக இருந்தது. – **ரைமண்ட் மேரி சலோமி,** குளச்சல்.
- மறைமாவட்டச் செய்திகள் நமது மறைமாவட்டத்தில் கடந்த மாத நிகழ்வுகளைத் தெரிந்து கொள்ள உதவியாய் இருந்தது. – **சேசுராஜ்,** தூத்துக்குடி.
- பங்குச் செய்திகள் மூலம் பங்கில் நடைபெறுகிற அன்றாட நிகழ்வுகள் சபை திருவிழாக்கள் கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்கள் போன்ற அனைத்து நிகழ்வுகளையும் வெளியூர்களில் வசிக்கும் எம்மைப் போல் வெளியூரில் வேலைபார்க்கும் அனைவரும் தெரிந்து கொள்ள வசதியாக உள்ளது. – **செல்வராஜ்,** சென்னை.
- அன்னையை அறிவோம் முத்தான கருத்துக்கள், செய்திகள் பல உள்ளடக்கியதாக இருந்தது. நன்றி –**ரஜூலா,** சாத்தான்குளம்.
- எண்ணங்களை மேம்படுத்துங்கள் கட்டுரை அருமையான அறிவுரைகள். வாழ்த்துக்கள். – **பெர்னத் சேலிஸ்,** இணையம்.
- முதற்சனி நன்கொடையாளர்கள் வரவு செலவு விபரம் எம்மைப் போன்றவர்களை அதில் பங்குபெற தூண்டுகிறது. –**ரவீஸ்டர்,** சென்னை.
- நமது வாழ்வில் அன்றாட ஜெபத்தில் ஜெபிக்க வேண்டிய புனித சூசையப்பர் ஜெபம் மிகச் சிறந்த பொக்கிஷமாகும்.. – **தாசன்,** கவரப்பேட்டை.
- முதற்சனி வழிபாட்டு நிகழ்வுகள் அன்னையின் அற்புதத்திற்கு மிக சிறந்த எடுத்துக்காட்டு. – **சந்தனசிலுவை,** வெள்ளகோயில்.
- 2013ம் ஆண்டு திருக்கல்யாண அன்னையின் திருத்தல 100வது தேரோட்டப் பெருவிழா சிறப்பு ஊர் பொது கூட்டத்தில் பணி குருக்கள் மூலம் இணைந்து பணியாற்ற முன் வந்த அனைவரையும் வாழ்த்தி பாராட்டுகிறேன். – **ஜெயராஜ்,** சென்னை.
- நமது ஊர் மேல்நிலைப்பள்ளி மாணவ, மாணவியர்கள் விளையாட்டுப் போட்டிகளில் பெற்ற வெற்றியை அறிந்து பேருவகை கொள்கிறேன். –**சுந்தர்,** மதுரை.
- "ஹெல்த் கார்னர்" பகுதியில் ஆவாரம் பூவைப்பற்றிய செய்திகள் அனைத்தும் பயனுள்ளதாக இருந்தது. – **அலெக்சியா,** கேரளா.
- காய்களும் அதன் மருத்துவக் குணங்களும் படித்துப் பாதுகாக்க வேண்டிய மருத்துவக்குறிப்புகள். – **டெனிஸ்,** திசையன்விளை

– **ஆசிரியர் குழு**

# மஞ்சளின் மகிமை :



மஞ்சளோடு வேப்பிலை, அறுகம் புல் அரைத்து வாரம் ஒரு தடவை உடம்பில் நன்றாக தேய்த்து குளித்து வந்தால் தோல் நோய்கள் ஓடிப்போகும். சொரி, சிரங்கு, படை, அரிப்பு போன்ற சரும வியாதிகள் இருப்பின் மஞ்சள் தடவி குளித்தால் குணமாகும். பாலில் மஞ்சள் பொடி அரைகிராம் கலந்து கொதிக்க வைத்து குடிக்க புற்றுநோய் குணமாகும். புண் உள்ள சர்க்கரை நோயாளிகள் குடித்தால் விரைவில் புண்கள் குணமாகும். சாம்பிராணி புகை போடும்போது அதில் மஞ்சள் பொடி, தேங்காய் மட்டை நார் கலந்து புகை பிடிக்க மண்டைச் சளி, தலைவலி, மூக்கடைப்பு, நீர்க்கோவை குணமாகும்.

– மதுரை **வி.ஜி.ஏ.ஆல்பர்ட்**

# வாழைப்பழ கேக்



**தேவையான பொருட்கள் :**

சுத்தமான மைதா மாவு – 1 கிலோ
வாழைப்பழம் 2 பெரியது, சர்க்கரை 2 கப், முட்டை – 2,
வெண்ணை 100 கிராம், பேக்கிங் பவுடர் இரண்டு டீஸ்பூன், பேக்கிங் சோடா அதே அளவு, உப்பு அரை டீஸ்பூன், புளித்த தயிர் 50 மி.லி, வெனிலா எசன்ஸ் 1 டீஸ்பூன்
உலர்ந்த திராட்சை தேவையான அளவு

**செய்முறை :**

மைதா பேக்கிங் பவுடர் பேக்கிங் சோடா உப்பு எல்லாவற்றையும் ஒரு பாத்திரத்தில் இட்டு ஒரு போர்க்கினால் கடைந்து கொள்ளவும். வட்டமான அல்லது சதுரமான ஒரு கேக் டின்னை வெண்ணை தடவி தயார் செய்துவொள்ளவும். இப்பொழுது வாழைப்பழத்தை துண்டுகளாக வெட்டி மசித்துக்கொள்ளவும் பழம் மிகக் கனிந்திருப்பது அவசியம். மசித்த பழத்துடன் முடடை மற்றும் சீனி சேர்க்கவும்

பின்னர் இக்கலவையில் வெண்ணை சேர்த்து நன்றாக கலக்கும் வரை அடித்துக் கொள்ளவும். பிறகு தயிர் மற்றும் வெணிலா எசன்ஸ் சேர்த்து கலக்கவும். ஓவனை 350/180 செ.க்கு ப்ரீ ஹீட் செய்து கொள்ளவும். பின்னர் ஈரமாவுடன் காய்ந்த மாவுகளைச் சேர்த்து அதிகமாக கடைந்து விடாமல் பக்குவமாக சேர்க்கவும். மிகவும் திரவப் பதமாக இல்லாமல் குறிப்பிட்ட பதத்திற்கு வந்தவுடன் முன்னரே வெண்ணை தடவி வைத்திருந்த கேக் டின்னில் மாவை இட்டு மேல் பகுதியானது சமமாக இருக்கும் படி செய்து கொண்டு ப்ரீ ஹீட்டரில் வைத்து முக்கால் மணி நேரம் அல்லது கலவை பொன்னிறமாக மாறும் வரை ஹீட் பண்ணவும். பின்பு கேக் டின்னை வெளியே எடுத்து சிறு துண்டுகளாக வெட்டி தட்டில் வைத்து பரிமாறவும். அசத்தலான பனானா கேக் தயார்

– **S.லோஷினி சௌந்தர்** F.do., வீரபாண்டியன்பட்டணம்.

# வரவேற்கிறோம்

**இறை ஆசீராய் எம் இல்லங்களில் பிறந்து பொற்பை திருச்சபையை அலங்கரிக்கும் அன்பு மலர்களே உங்களை பாசமுத்தத்துடன் வரவேற்கிறோம்**

1. அஜித் குட்வின்
2. ரியா
3. லூயிஸ் செல்சி
4. அஷ்வந்த் சாமோன் ராஜா
5. ஜோஸ் நிஷாந்த்
6. பென்சிகா பாரதி
7. மெர்லின் ஏஞ்சல் ராஜ்
8. ஹெலன்
9. அன்சிகா
10. மரிய கோல்டன் பிரசன்னா
11. ஜோஸ்வா ஜெனோஸ்
12. அந்தோணி அபினேஷ்
13. அந்தோணி அனிஷ் ஸ்டெபி
14. ஜோஸ் ரியான்
15. ஜாண்பிரிட்டோ
16. சகாய ஜெசிகா
17. அந்தோணி ரெனோ
18. ஜெய் சேவியர்
19. அந்தோணி சிரோஸ் பெல்லா
20. ஆக்னஸ் ஜெரின் ஜோன்ஸ்
21. ஸ்டார்வின் ஏஞ்சல்
22. அப்சலோம்
23. சர்மி ஏஞ்சலின்
24. அருள் ஹெலினா
25. பெலிபா ஜார்ஜின்
26. யேசு சாமுவேல் ராஜா
27. அபிக் ஜீவா

# லூர்து அன்னை



1858ம் ஆண்டு பிப்ரவரி 11ம் நாளிலிருந்து ஜுலை 11ம் நாள் வரை பிரான்ஸ் நாட்டில் உள்ள லூர்து என்னுமிடத்தில் பெர்னதத் என்னும் 14 வயது சிறுமிக்கு தேவதாய் 18முறை காட்சி கொடுத்தார். 18 தடவையும் அன்னையின் கையில் ஜெபமாலை இருந்தது. பாவிகளுக்காக செபிக்கும்படி தவம் செய்யும்படி, அற்புத சுனையிலிருந்து நீர் அருந்தும்படி தேவதாய் கேட்டுக்கொண்டார்கள். அன்னையின் பெயரை தெரிவிக்கும்படி பெர்னதத் திரும்பத் திரும்ப கேட்டார். மாதா புன்சிரிப்புடன் கரங்களைக் குவித்து "**நாமே அமல உற்பவம்**" என்று சொல்லி மறைந்தார்கள். அமல உற்பவ அன்னையே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

– மிக்கேல் உஷா. பொற்பை

## அருள் நிறை மரியே

அருள் நிறை மரியென,
இனிமையாம் கர்த்தரை எமக்கு,
உலகில் உவகை பொங்கிட
எத்திசையிலிருந்தும் உமக்கு
ஐயந்திரிபற உம் செபத்தை
ஓங்கும் புகழுடன் வாழ
ஆண்டவரால் சாட்சி பெற்ற
ஈந்திட்ட மாமரியே
ஊக்கமுடன் செபித்த தாயே
ஏற்றமுடன் பக்தர் கூடி
ஒற்றுமையாய் செபித்து
ஔடதமாய் விளங்கும் அன்னையே

–சுகிர்தமணி அன்பரசன், கவரப்பேட்டை

**புனிதர்களின் பாதையில்...**

# புனித அருளானந்தர் (1647–1693)



இவர் போர்த்துக்கல் நாட்டில், லிஸ்பன் நகரில் 1647, மார்ச் 1-ம் தேதி பிறந்தார். உயர்ந்த பதவியை உதறித் தள்ளிவிட்டு, இவர் இயேசு சபையில் சேர்ந்து இந்தியாவுக்கு வந்தார். மக்களை கடவுளிடம் கொண்டு வர இவர் உழைக்க வேண்டும். அவ்வேலையைத் தொடங்குமுன் தம்மை தாயரிக்கும்படி முப்பது நாள் ஞான ஒடுக்கம் செய்தார். தமிழ் மொழியில் பேசவும், போதிக்கவும் திறமை பெற்றார். அடுத்த பத்து ஆண்டுகளாக தமிழ்நாட்டில் பல இடங்களுக்குச் சென்றார். சென்னை, வேலூர், தஞ்சாவூர், மதுரை, இராமநாதபுரம் இம்மாவட்டங்களை அவர் சந்தித்து தம்மால் இயன்ற நன்மைகளை செய்தார். 1664ல் இராமநாதபுரம் மகாராஜா இவரைக் கைது செய்தான். நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்ற நிபந்தனையோடு இவரை விடுதலை செய்தான். நான்கு ஆண்டுகளுக்குப்பின்பு போர்த்துக்கல் நாடு சென்றார். இவரை பேராயராக்க பெருமுயற்சிகள் நடைபெற்றன. இவர் இணங்கவில்லை. திரும்பவும் இந்தியாவுக்கு வந்து மறவன்சீமையில் உழைத்தார். அரச குடும்பத்தைச் சேர்ந்த தடியத் தேவர் கிறிஸ்தவராக விரும்பினார். அவருக்கு மனைவியர் பலர் உண்டு. முதலில் மணமுடித்தவளை மட்டும் வைத்துக்கொண்டு ஏனையோரைத் தள்ளிவிட்டார். தள்ளப்பட்டவர்களில் ஒருத்தி இராமநாதபுரம் அரசனின் நெருங்கிய உறவினள். பெயர் கடலாய். அவள் அரசனிடம் முறையிட, அரசன், 1693ம் ஆண்டு பிப்ரவரி 4-ம் நாள் விபூதி விழாவன்று அருளானந்தரின் தலையை வெட்டிக் கொல்ல கட்டளையிட்டான். வெட்டுண்ட இடத்திலுள்ள மண் இன்றும் சிவப்பாக காணப்படுகிறது.

**சிந்தனை :** நான் கடவுளது அழைப்புக் குரலுக்கு இணங்காவிட்டால் கடவுளது கோபத்தை எழுப்பிவிடுகிறேன்.

**செபம் :** புனித அருளானந்தரே, தமிழ்நாட்டின் திருச்சபைக்காக இயேவை மன்றாடும்.

**– தூயவர்களின் வரலாறு**




சென்னை வாழ் பொற்பை நகர் மக்கள் நல சங்க ஆண்டு விழா, கிறிஸ்மஸ் விழா, மற்றும் புத்தாண்டு விழா 30.12.2012 அன்று நடைபெற்றது. அதில் நடைபெற்ற கலைநிகழ்ச்சியில் ஒரு பதிவு

# வரமருளும் தாயே...




கண்ணின் மணியென காத்துவரும் கல்யாண மாதாவே...
காலமெல்லாம் கருணை மழை பொழிய வரமருளும் தாயே!
கிறிஸ்து பெருமகனை எமக்காய் தந்த கல்யாண மாதாவே...
கீதங்கள் ஆயிரம் பாடி புகழ வரமருளும் தாயே!
குடும்ப உறவுகள் கூடிக் கும்பிடும் திருக்கல்யாண மாதாவே...
குறைகள் இல்லாத வாழ்க்கை வாழ வரமருளும் தாயே!
கெஞ்சி மன்றாடும் எம் விண்ணப்பம் ஏற்கும் கல்யாண மாதாவே...
கேட்டதை ஒருபோதும் அடையாமல் போனதில்லை எம் தாயே!
கொடையே அருள் தரும் இமய கல்யாண மாதாவே...
கோடி நன்றிகள் புகழ்மாலையாய் உன் பதம் வைத்தேன் தாயே!

**– ம. ஜாண் ஸ்டீபன்ராஜ்**
பாளையங்கோட்டை

அறிவியல் அறிஞர்கள் :

# சர் ஐஸக் நியூட்டன்



- உலகப் புகழ் பெற்ற இயற்பியல் விஞ்ஞானி.
- ஆப்பிள், மரத்திலிருந்து விழுவதை நேரில் பார்த்து அது கீழே விழுந்ததும், மற்ற பொருட்கள் நிலையாக இயங்குவதும் புவுயீர்ப்பு விசையால் தான் என்று கண்டறிந்தவர்.
- சூரிய ஒளி ஏழு வண்ணங்களால் ஆன கலவை என்ற உண்மையை உலகிற்கு முதலில் எடுத்துச் சொன்னவர்.
- விசைக்கான SI அலகு இவர் பெயரால் அமைந்தது.
- G.W. லெய்ப்னிஸ் என்பவரோடு சேர்ந்து கால்குலஸ்ஸை உருவாக்கியவர்.
- பொருட்களின் இயக்கம் பற்றி மூன்று விதிகளை உருவாக்கியவர்.
- ஒவ்வொரு விசைக்கும் சமமான எதிர்விசை ஒன்று உண்டு என்ற இவரது 3ம் விதி மிகவும் புகழ்பெற்றது.
- Principia Mathematica என்பது இவர் எழுதிய நுலாகும்.

**– 'கையளவு களஞ்சியம்'**



# குறுந்தகடு வெளியீடு

அன்னையின் திருவிழாவை முன்னிட்டு 7 பாடல்கள் அடங்கிய கல்யாணத் தாய் மரியே - பாகம் 3 என்ற குறுந்தகடு பேராயர். பீட்டர் பர்னாந்து அவர்களால் வெளியிடப்பட்டது. அதன் முதல் பிரதியை பங்குத் தந்தை அருள்திரு. பபியான் ஜோசப் அவர்களும் இரண்டாவது பிரதியை அருள்சகோதரி. மிக்கேல் அவர்களும் பெற்றுக் கொண்டார்கள். ஒலிநாடா வெளியிட உபயம் செய்து உதவிய திரு. S.M.A.ஜார்ஜ் குடும்பத்தாருக்கு நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

*பங்குத் தந்தை & பங்கு மக்கள்*

# திருத்தலதிருவிழா உணவகம்

அன்னையின் ஆலய வளாக வட பகுதியில் பவள விழா மணடபத்தின் தாழ்வாரத்தில் உணவகம் ஒன்று அமைக்கப்பட்டது. உள்ளூர் மற்றும் வெளியூர் பக்தர்கள் பயன் அடையும்படி அவர்களுக்கு குறைவான விலையில் சிக்கன் பிரியாணி, இட்லி பூரி, கேசரி, டீ, காபி, புரோட்டா என வழங்கப்பட்டது. உணவகம் செயல்பட உதவிய திருக்கல்யாணத் தாய் புகழ் பரப்பும் பணிக்குழுவினருக்கு நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

*-பங்குத் தந்தை & பங்கு மக்கள்*

# திருப்பயணிகள் தங்குமிட வசதி

வெளியூர் பக்தர்கள், அனைவரும் தங்குவதற்கு புனித மரியன்னை மேனிலைப்பள்ளியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதன் தென்புறம் மற்றும் வடபுறம் பந்தல்களும் அமைக்கப்பட்டிருந்தது. மேலும் புனித மரியன்னை துவக்கப்பள்ளி, புனித வளனார் துவக்கப்பள்ளி மற்றும் பவளவிழா மண்டபத்தின் இரண்டாவது தளத்திலும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அங்கு அவர்களுக்குத் தேவையான தண்ணீர் வசதி, குளியலறை வசதி, தங்கும் இட வசதி, அமைக்கப்பட்டு இருந்தது. அதனை கவனித்த ஆசிரிய பெருமக்கள் தன்னார்வத் தொண்டர்கள், இளைஞர்கள், தன்னார்வ பள்ளி மாணவர்கள் அனைவருக்கும் நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

*பங்குத் தந்தை & பங்கு மக்கள்*

# அருள்தரும் இமயம் திருக்கல்யாணத் தாயின் திருவிழா கொடியேற்ற நிகழ்வுகள்

14.01.2013 திங்கள்கிழமை திருக்கல்யாணத் தாயின் திருவிழா ஆரம்ப நாள் அன்று மாலை 6 மணிக்கு கோயில் மணிகள் ஒலிக்க, ஜெபமாலை, மாதாவின் பிரார்த்தனை சொல்லப்பட, மக்கள் அனைவரும் ஆலய முற்றத்தில் ஒன்று கூடி, புனித மிக்கேல் அதிதூதரின் சப்பரத்தை மேள வாத்தியங்கள் முழங்க, பக்தியுடன் ஆலய ரத வீதியைச் சுற்றி வந்தனர். பின்னர் மக்கள் அனைவரும் பங்குத் தந்தையின் இல்லம் வந்து கொடியேற்ற நிகழ்வுக்காக வருகை தந்திருந்த மதுரை உயர் மறைமாவட்ட பேராயர் பீட்டர் பர்னாந்து மற்றும் பங்குத் தந்தையுடன் கொடியேற்ற நிகழ்வுக்காக வருகை தந்திருந்த அனைத்து குருக்களுக்கும் மாலை அணிவித்து கோவிலுக்கு பவனியாக அழைத்து வந்தனர். பின்னர் கோவிலுக்குச் சென்று பங்குத் தந்தை அன்னையின் கொடியை ஏந்தி வர பாடகர் குழுவினர், மாதாவின் பாடல் பாட கொடி மரத்திற்கு அன்னையின் கொடி எடுத்து வரப்பட்டது. பேராயர் அவர்கள் கொடியை அர்ச்சித்து, கொடிமரத்தில் கொடியை ஏற்றி வைத்தார்கள். ஆலய மணிகள் ஒலிக்க மக்கள் பண்ணிசைக்க வாண வேடிக்கைகள் வானில் வண்ணக் கோலமிட திருவிழா ஆரம்பமாகியது. மாலை வழிபாட்டிற்குப் பிறகு பேராயர் அவர்கள் கல்யாணத் தாய் மரியே - பாகம் 3 என்ற குறுந்தகடை வெளியிட முதல் பிரதியை பங்குத்தந்தை அவர்களும், இரண்டாவது பிரதியை அருள்சகோதரி அவர்களும் பெற்றுக் கொண்டார்கள். நிறைவாக மக்கள் அனைவருக்கும் பொங்கல் விருந்து வழங்கப்பட்டது.

- S.அந்தோணிஜெயராஜ், பொற்பை

# குட்டி ஏஞ்சல்கள் திருவிழா – 10.02.2013



"சிறு பிள்ளைகளை என்னிடம் வர விடுங்கள் என மொழிந்த நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து இறை ஆட்சியை சிறு பிள்ளைபோல் ஏற்றுக் கொள்ளாதோர் அதற்குட்பட மாட்டார்"(மாற்கு : 10 : 14-15)

குழந்தைகள் குழந்தைகளுக்காக உதவிடும் நோக்கில் செய்யப்படும் உலகளாவிய மாபெரும் சபைதான் பாலர் சபை. பாலர் சபை இயக்கம் பிரான்ஸ் நாட்டில் உருவானது நான்சி என்னும் மறை மாவட்டத்தின் ஆயராக பணியாற்றிய சார்லஸ் தெ.போர்வின் ஜாண்சன் என்பவர் பாலர் சபையை 1843ல் ஏற்படுத்தினார். திருத்தந்தை 11 ம் பத்தி நாதர் பாலர் சபையில் சேர்வதன் மூலம் ஒவ்வொரு கத்தோலிக்க குழந்தையும் நல்ல கிறிஸ்தவர்களாக கூடிய மன நிலையையும் மதிப்பீடுகளையும் பெற முடியும் என்று சொல்லி பாலர் சபையை தனது நேரடி கண்காணிப்பில் உள்ள திருத்தந்தையின் சபையாக உயர்த்தினார். பாலர் சபையானது இன்று உலகில் 127 நாடுகளில் செயல்படுகிறது. இறை வேண்டல், தியாகம், பொருள் உதவிகள் வழியாக தங்கள் திருத்தூதர் பணியை ஆற்றத் தூண்டுவதே இச்சபையின் முக்கிய நோக்க மாகும். பிப்ரவரி 2 ம் ஞாயிறு பாலர் சபை தினமாக நமது பங்கில் கொண்டாடப்படுகிறது.

- லூசியா மெர்லின் ஆசிரியை, இராஜேஸ்வரி ஆசிரியை, பொற்பை.

# வரவேற்கிறோம்

**21.01.2013 திருக்கல்யாண அன்னையின் திருவிழாவின் போது மேதகு ஆயர் இவோன் அம்புரோஸ் அவர்களின் திருக்கரத்தால் உறுதிப்பூசுதல் பெற்றவர்கள்**

1. D.டார்வின் ஜோர்ஜியா
2. A.அந்தோனி நிக்சன்
3. C.அந்தோணி சுபாஷ்
4. S.அருள் ராஜன்
5. A. பிரான்சிஸ் சந்தியா
6. A.அதிசய ரீகன்
7. A. டிலைட்சன் லூர்து ஜெயக்கொடி
8. M.ஜெனித்
9. P.பிரகாஷ் ராஜ்
10. A.சகாய ரமேஷ்
11. A.செல்வபிரபாகரன்
12. D.ஜெனிபா
13. A.ரஸ்கின் ஜெரோம்
14. M.சந்தன வின்சியா
15. A.சந்தன திவ்யா
16. J.ஆன்சி மேஹா
17. P.அந்தோணி சுஜிதா
18. L.அந்தோனி ஜேஸ்மின்
19. D.ஆரோக்கிய ஸ்டெபி சினேகா
20. A.பியா டிப்னா
21. C.சகாய தர்ஷிணி
22. R.ரம்யா
23. P. சகாய பிரிதிகா
24. J.சகாய செல்வி
25. M.சகாய வளர்மதி
26. S.மரிய நேவிஸ் பிரின்சிபா
27. M.ஜெனிஷா சித்திரை மேரி
28. R.எப்சிபா செல்வகுமாரி
29. A.ஜெய தர்ஷிணி
30. P.மேகலா தைனேஸ் பாக்கியம்
31. P.கீதா மேரி
32. J.செல்வ நிவேதா
33. S.மரிய நவிதா
34. A.மேரி சௌமியா
35. R.ஆரோக்கிய அமுதா
36. A.சகாய ஜெஸ்மின்
37. S.அருள் அன்பு சதீஸ் ராஜா
38. S.ராஜேந்திர பாபு
39. S.ராஜேந்திர பிரபு
40. S.நாஞ்சில் ராஜா
41. I.ரமேஷ் குமார்
42. F.விஜய் காமராஜ்
43. G.அந்தோணி ஜார்ஜ்

# ஊர் பொது அசனம்

திருக்கல்யாண அன்னையின் திருவிழா நிறைவு பெற்ற அடுத்த நாள் 24.01.2013 அன்று மாலை திருப்பலிக்கு பிறகு ஊர்ப் பொது திருவிழா சிறப்பு அசனம் நடைபெற்றது. இந்த சிறப்பு அசனத்தில் அன்னையின் பக்தர்கள் அனைவரும் எந்தவித வேறுபாடுமின்றி அன்னையின் ஆலய வளாகத்தில் ஒன்றாக அமர்ந்து உணவு அருந்தி தங்கள் அன்பை பகிர்ந்து உறவை புதுப்பித்துக் கொண்டு அன்னையின் ஆசியைப் பெற்றுச் சென்றார்கள். பங்குத்தந்தை மற்றும் பங்கு மக்களோடு இணைந்து அசனத்தை சிறப்பாக நடத்தி தந்த ஊர் அசன கமிட்டியார் மற்றும் தன்னார்வத் தொண்டர்களுக்கு நன்றியும் பாராட்டுகளையும் அர்ப்பணிக்கிறோம்.

-பங்குத் தந்தை & பங்கு மக்கள்

# வாழ்த்துகிறோம்

**23.01.2013 திருக்கல்யாண அன்னையின் திருவிழாவின் போது பேரருட்திரு. ஆண்ட்ரு டிரோஸ் அவர்களின் திருக்கரத்தால் புதுநன்மை பெற்ற குழந்தைகள்**

1. **A.**தேவ சுனில் ரோகன்
2. **J.**அரிஸ்வின்
3. **S.**அபிஷேக்
4. **L.**ஜென்சன் ஆன்றோ
5. **A.**சேவியர் மெல்கின்
6. **X.**ஆன்றோ ஜெரிஸ் பிரின்சி
7. **X.**உபகார ஜெகதீஸ்
8. **A.**திருக்கல்யாண ஜாக்சன் துரை
9. **B.**ஆனந்த் ஜெனித்
10. **A.**அற்புத ராஜ்
11. **A.**அந்தோனி செல்வராஜா
12. **A.**பிரான்சிஸ் செல்வ சுபகான்
13. **J.**ஜுலியட் அனுஷா
14. **M.**மரிய ஜெயசீலி
15. **A.**அந்தோணி சர்மிளா
16. **M.**மரிய தினிஷா
17. **S.**பாஸ்டினா ஸ்மைலி செல்ஜிதா
18. **A.**ஆன்றோ சேவியர் ஹைடன்
19. **J.**அருள் தமிழ் செல்வன்
20. **J.**அன்றனி சகாய அரிஸ்
21. **K.**மிக்கேல் அமல்ராஜ்
22. **A.** மைக்கிள் டெனிஷா
23. **J.**ஜாய்ஸ் பிரீத்தி
24. **B.**ஜெனிபா எழிலரசி
25. **M.**ரியாஸ்
26. **M.**செல்சியா விண்ணரசி
27. **X.**அட்ரிக் கல்யாண்
28. **S.**ஆல்வின் சகாய ஜோ
29. **J.**ஜெனிஸ்
30. **M.**மேரி திவ்யா ரோஷிணி
31. **M.**கிரண்ராஜ்
32. **D.** டோமினிக் ரோஷன்
33. **D.**டோமினிக் ரிச்சர்டு
34. **D.**டோமினிக் ரெனிலா
35. **G.**அஜித் குட்வின்
36. **G.**அனிஷ்டா ஸ்நேகா
37. **D.**டெனிலா மெரில்
38. **A.**மரிய சுவேதா
39. **J.**சகாய சித்திரை வினிஷா
40. **M.**சபின் அன்டோ
41. **E.**டயானா அட்லின் பெவினா
42. **T.**ஆகாஷ் செர்சின்
43. **M.**அந்தோணி செல்வ ரோபிசன்
44. **M.** செரின் பிரபா
45. **M.** பிரியதர்ஷிணி
46. **M.** ஹரிணி
47. **M.** ஜெபா ஆஷா



## மார்கழிப் பனியில்...

மார்கழி பனியில் மாபரன் உதித்திடவே
மாட்சியாய விளங்கிய தாயே
மாட்டுத் தொழுவினில் மாந்தர் துயிலும் இரவினில்
மாட்டின் தீவனத் தொட்டியில் உதித்த வேந்தே
பொற்பை நகர் மக்கள் நலச் சங்கத்தை
பொறுப்புடனே ஏற்படுத்தி
பொறுப்பாளர்களுக்கு ஊக்கமளித்து
பொங்கிடும் காவியமாய் பொறுமையாய் திட்டமிட்டு
பொற்பையின் புகழ் பரப்புவோருக்கு ஆசி அருளும்.

**-ஜோஸ்பின் மேரி தாசன்** கவரப்பேட்டை - 601206

# இரண்டாமாண்டு கண்ணீர் நினைவலைகள்



## I. அந்தோணி ஜோசப் மாணிக்கம் ராஜா

**மலர்ந்தது : 10–01–1980** **உதிர்ந்தது : 04–02–2011**

அன்பு நண்பா ! ஆருயிர் நண்பா !
இப்போதுதான் நீ பேசிவிட்டு வீட்டிற்கு
சென்றது போல் ஞாபகம் இருக்கின்றது !
அதற்குள் இரு வருடங்கள் முடிந்து விட்டதே !
நாம் நண்பர்களாய் பேசிய இடங்கள்,
வெறுமையுடன் தோன்றுகின்றன நீயின்றி !
உன்னால் இதைஉணரமுடிகிறதா ?
அந்த நாட்கள் இனி வரவே வராதா!!
வேதனைகளை இதயத்தில் மறைப்பதில் வல்லவன் நீ!
நண்பர்களுக்கு ஆலோசனைகள் தருவதில் நல்லவன் நீ !
எத்தனை சோகங்கள் மனதில் இருந்தாலும்
மற்றவர்களை சிரிக்க வைப்பதில் சிறந்தவன் நீ !
மீளாத்துயரில் எம் அனைவரையும் மூழ்கடித்து விட்டு
நீ விண்ணகம் சென்று விட்டாய் !
என் மனம் நொறுங்கிப்போய் உள்ளதே !
என்று இந்த வேதனை தீரும் ?
இரு வருடங்கள் ஆகியும் கூட உன் நினைவு சிறிதும் அகல வில்லையே !
இதைத்தான் நட்பின் இலக்கணம் என்பார்களோ !
உன் நினைவால் நித்திரை இழந்து நிதம் நிதம்
விரக்தியின் விளிம்பில் நின்று கொண்டிருக்கும் ஜீவன்!
திருக்கல்யாணஅன்னையின் அருளால் இனி
ஒரு முறை உன்னைக் காணும் அதிசயம் நிகழ்ந்தால்
அந்த தருணத்திற்காக காத்திருக்கும் ஜீவன்


*என்றும் உன் நினைவலைகளுடன்*

**S. அந்தோணி வில்பர்ட்** B.E.,–பொற்பை நகர்.



# குட்டீஸ் கார்னர்

படத்தில் உள்ள குட்டி முயலுக்கு அதற்கு பிடித்தமான கேரட் இருக்கும் இடத்திற்கு சென்று சாப்பிட விருப்பம் ஆனால் பாதை தெரியாமல் விழித்துக் கொண்டிருக்கிறது... பாவம் நீங்கள் கொஞ்சம் உதவி செய்யுங்களேன்.







இரண்டு படங்களுக்கும் இடையில் குறைந்தபட்சம்

**7**

வித்தியாசங்கள் உள்ளது.

**60** செகண்டுகளில் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்...

# வாழ்வு தரும் வார்த்தைகள் – பெப்ருவரி – 2013

| தேதி | திருநாட்கள் | வாசகம் | வாசகம் |
|---|---|---|---|
| 1. | புனித பிரிஜித் | எபி. 10:32-39 | மாற். 4:26-34 |
| 2. | | மலா.3:1-4 எபி.2:14-18 | லூக். 2:22-40 |
| 3. | | எரே.1:4-5, 17-19<br>1கொரி 12:31, 13:13 | லூக். 4:21-30 |
| 4. | புனித அருளானந்தர் | எபி. 11:32-40 | மாற். 5:1-20 |
| 5. | | எபி.12:1-4, | மாற். 5:21-43 |
| 6. | | எபி.12:4-7,11-15 | மாற்.6:1-6 |
| 7. | | எபி.12:18-19,21-24, | மாற். 6:7-13 |
| 8. | புனித ஜெரோம் எமிலியானி | எபி. 13:1-8 | மாற். 6:14-29 |
| 9. | | எபி.3:15-17,20-21 | மாற். 6:30-34 |
| 10. | புனித பாலர் சபை நாள் | எசா.6:1-2a,3-8<br>1கொரி.15:1-11 | லூக். 5:1-11 |
| 11. | தூய லூர்து அன்னை | தொ.நூ 1:1-19 | மாற். 6:53-56 |
| 12. | | தொ.நூ 1:20-2:4a | மாற். 7:1-13 |
| 13. | திருநீற்றுப்புதன் | யோவே2:12-18<br>2கொரி.5:50- 6:2 | மத். 6:1-6,16-18 |
| 14. | புனிதர்கள் சிரில் மெத்தோடியஸ் | இச. 30:15-20 | லூக். 9:22-25 |
| 15. | புனிதர்கள் பவுஸ்தினுஸ்,ஜோவிட்டா | எசா 58:1-9a | மத். 9:14-15 |
| 16. | புனித ஒனேசிமுஸ் | எசா. 58:9b-14 | லூக். 5:27-32 |
| 17. | தவக்கால ஞாயிறு 1 | இச. 26:4-10<br>உரோ. 10:8-13 | லூக். 4:1-13 |
| 18. | புனித பெர்னதத்து | லேவி 19:1-2,11-18 | மத்.25:31-46 |
| 19. | புனித பர்பாத்தூஸ் | எசா 55:10-11 | மத். 6:7-15 |
| 20 | புனித யுசெரியஸ் | யோனா 3:1-10 | லூக் 11:29-32 |
| 21. | புனித பேதுரு தமியான் | எஸ்.C12,14-16,23-25 | மத்.7:7-12 |
| 22 | புனித பேதுருவின் தலைமைபீடம் | 1பேதுரு 5:1-4 | மத். 16:13-19 |
| 23 | புனித பொலிக்கார்ப் | இச.26:16-19 | மத். 5:43-48 |
| 24 | தவக்கால ஞாயிறு 2 | தொ.நூ.15:5-12,17-18<br>பிலிப். 3:17-4:1 | லூக்.9:28b-36 |
| 25 | | தானி.9:4b -10 | லூக்.6:36-38 |
| 26 | | எசா. 1:10,16-20 | மத். 23:1-12 |
| 27 | புனித கபிரியேல் | எரே. 18:18-20 | மத்.20:17-28 |
| 28 | புனிதர்கள் ரோமானுஸ் லுபிசினுஸ் | எரே. 17:5-10 | லூக். 16:19-31 |

## கடந்த மாத குறுக்கெழுத்து போட்டியின் சரியான விடைகள்

**இடமிருந்துவலம்:** 1 எருசலேம் 5 ஆணவம் 9 காணிக்கை 13 சாரா 17 நினிவே 21 பேறு

**வலமிருந்து இடம்:** 2 தீர் 6 ஒன்றிப்பு 10 மணமுறிவு 14 தருமம் 18 எதினா 22 மகிழ்ச்சிப்பாக்கள்

**மேலிருந்து கீழ்:** 3 பெலிஸ்தியர் 7 முப்பது 11 தெபோரா 15 சோம்பல் 19 பயணம் 23 நாகூம்

**கீழிலிருந்து மேல்:** 4 குலதெய்வங்கள் 8 வணிகர் 12 சக்கர்தோன் 16 அசரியா 20 மகிழ்ச்சி.

## கடந்த மாத குறுக்கெழுத்து போட்டியில் வெற்றி பெற்றவர்கள்

1. **D.ஜோஸ்பின் மோரிதாசன்** கவரப்பேட்டை
2. **குயின்ரோஸ் பாக்கியம்** பொற்பை
3. **பிரின்ஸ் ஜேம்ஸ்** பொற்பை
4. **S.லூர்து ரெக்ஸ்** பொற்பை
5. **S. மேரி லீலா** பொற்பை
6. **J. பீற்றர் ஜோசப்** சென்னை
7. **M. ஆகாஷ் துரை** வெள்ளக்கோவில்
8. **கபிரியேல் மேரி** பொற்பை
9. **P.சந்தனத்திரவியம்** பொற்பை
10. **M.டேவிட்தேவராஜன்** வெள்ளக்கோவில்
11. **A. மரியமெர்லின்** அடைக்கலாபுரம்
12. **G. ரெஜினாள்மேரி** பொற்பை
13. **A.அந்தோனிஷைனி** பொற்பை
14. **A. மேரி ஷாலினி** பொற்பை
15. **M.டேவிட் லியோன்** பொற்பை
16. **M. ஜெப ஆஷா** வெள்ளக்கோவில்
17. **S. ஜோஸ்பிரகாஷ்** பொள்ளாச்சி
18. **அமலா பென்சி** கொழுந்தட்டு
19. **அபிதா,** கொழுந்தட்டு

# அன்னை திருக்கல்யாணத் தாய்



ஒரு தாயின் அளவற்ற அன்பின் அடையாளச் சின்னம்
திருக்கல்யாணத் தாய் அருள் நிறைந்தவர் பேறுபெற்றவர்
ஆசீர்வதிக்கப்பட்டவர் கறைபடிந்த மானிட இனத்தில்
கறைபடியாத மாசற்ற பிறவியாக பிறந்தவர் அன்பின்
பிறப்பிடமாக தியாகத்தின் இருப்பிடமாக கருணையின்
சிறப்பிடமாக அகிலத்தின் உறைவிடமாக விளங்குகிறார் நம்
அன்னை திருக்கல்யாணத்தாய்!

இறை வார்த்தைக்கு செவிமடுத்து இறைவனின் சித்தத்தை
நிறைவேற்ற தன்னுடைய வாழ்க்கையை விடுதலைப் பயணமாக தொடங்கி ஒரு
அர்ப்பண வாழ்க்கையாக பணிவிடை செய்து இன்ப துன்பத்தை பகிர்ந்து
இறைவார்த்தைக்கு சான்று பகரும் வாழ்க்கை வாழ்ந்தவர்
அன்னை திருக்கல்யாணத் தாய்

– இரா. ஜோசப் அலெக்ஸ் பிரிட்டோ
வேப்பங்காடு.

# 30-ம் நாள் கண்ணீர் அஞ்சலி







திருமதி. **சி. சேசம்மாள்**

(ஓய்வு பெற்ற ஆசிரியை)

மலர்ந்தது
20.06.1938



உதிர்ந்தது
13.12.2012

உம் ஆன்மா இறைவனில் இளைப்பாற

இறைவனை வேண்டுகிறோம்.

**செபிக்க அழைக்கும்...**

**அன்பு கணவர்**

## ம. சிங்கராயன்

ஓய்வுபெற்ற சுகாதார ஆய்வாளர்

முன்னாள் சாஸ்தாவி நல்லூர் ஊராட்சி மன்ற தலைவர்


| மக்கள் | மருமக்கள் |
|---|---|
| அந்தோனி சகாய ஜஸ்டின் | வாணி |
| வென்சி பிரபா | தேவசகாயம் |
| ரூபட் நேவிஸ் | மேரிரமணி |

**பேரன், பேத்திகள் :**

**மேரி திவ்யா, கிளாடிஸ் ரேவந்த்,**

**அந்தோனி தாமஸ் ரொசாரியோ**

21 6



# விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி

**பதில்கள் தேடவேண்டிய பகுதி**
**யூதித்து அதிகாரம் 1-16**
**எஸ்தர் அதிகாரம் 1 -10,**
**சாலமோனின் ஞானம் அதிகாரம் 1 -19.**

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசிநாள் : 15.02.2013**

## இடமிருந்து வலம்

1. எருசலேமில் இருந்த தலைமைக் குரு யார்?
5. யூதித்தின் கணவர் யார்?
9. ............................ இறப்பு என்பது இல்லை.
13. ஆண்டவர் தம்மை மூடிக்கொள்ளும் படைக்கலம் எது?
17. எது ஞானத்தோடு உறவு கொள்வதில்லை.
21. ஞானத்தினால் நான் ......................... எய்துவேன்.
25. பாசறைக்கு நிழல் கொடுத்தது எது?
27. எகிப்தியர்கள் தங்களுக்கு .............செய்தவர்களையே அடிமைப்படுத்தினர்.

## வலமிருந்து இடம்

2. அம்மோனியர் யாவருக்கும் தலைவர் யார்?
6. யாக்கோபின் தாய் மாமன் யார்?
10. தூய வாழ்வுக்கு............................உண்டு.
14. ஆண்டவரிடமிருந்து மன்னர்களுக்கு வழங்கப்பட்டது என்ன?
18. ஞானத்தின் முன் களிமண்ணாய் கருதப்படுவது எது?
22. உமது ஆற்றலே நீதியின்......................
26. ..........................நகரத்தார் வேற்றினத்தாருக்கு இடம தர மறுத்தனர்.

## மேலிருந்து கீழ்

3. .............வெறுக்கும் கடவுள் அவர்கள நடுவே இருக்கிறார்.
7. யாயீரின் மகன் யார்?
11. நீதி மான்களை கடவுள் எதைப்போல் ஏற்றுக்கொண்டார்?
15. உயர்நிலையில் உள்ளவர்களுக்கு கடவுள் என்ன வழங்குவார்?
19. ஞானம் ................................ கொண்டது.
23. நீதியை உருவாக்கும் .............................. வாழ்த்துக்குரியது.

## கீழிருந்து மேல்

4. ஊசியாவின் தகப்பன் யார்?
8. மனித நேயமுள்ள ஆவி எது?
12. அறிவுத் திறனின்............................. அசைவுறாது.
16. ஒருவரை கடவுள் அருகில் அழைத்துச்செல்வது எது?
20. ஞானத்தை எது மேற்கொள்ளாது?
24. உமது ........................... இறுதிவரை நீடிக்கவில்லை